இலங்கையில் 16000 தமிழர் கப்பலேறிய கதை

சிறுபான்மையோர் சிறந்த
தலைவர் இல்லாததால் படும்
துன்பங்கள்

எழுதியவர்
லண்டன்சென்ற
செ. வைத்திலிங்கம்

ஒற்றுமை பத்திரிகையை படியுங்கள். இலங்கையில் மூன்று பாஷையில் நடைபெறும் ஒரே பத்திரிகை இதே. ரூபாய் 5 அனுப்புங்கள் - இந்தியா மலாய் நாட்டுக்கும் அனுப்பலாம்.

செ. வைத்திலிங்கம்
Room 47, Bristal Hotel
Colombo.

பண்டித நேரு

ச. இராசகோபாலாச்சாரி.

கு. காமராசர்.

★

சென்னை,
29-4-1962.

திரு. வைத்திலிங்கம் தாங்கள் கொடுத்த மகஜரை திருமதி பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியிருக்கிறேம் தங்களின் தமிழ் ஆர்வத்தையும் தமிழரில் உள்ள உண்மையான பற்றையும் நேர்முகமாக சம்பாஷித்த பொழுது அறிந்தேன். மிகவும் நன்றி.

இங்ஙனம்,

கு. காமராசர்,



நாட்டின் ஒற்றுமையை வளர்த்த

பெரியார்!

தன்னலமற்ற தமிழ் தொண்டர்!

சேர். பொன். இராமனதன்

சென்ற நூற்றாண்டில் தலைவர்களில் சேர். பொன். வாழ்ந்த அரசியல், சமூக இராமநாதன் அவர்கள் முதன்

மையர்னவர். இலங்கை மக்களின் அரசியல் சுதந்திரத்திற்கு வித்திட்ட செம்மல் இவரே. இனபாகு இலங்கையர்களின் நலனுக்காகப் பாடுபட்டார். இலங்கை மக்களிடையே நாம் இலங்கையர் என்ற உணர்ச்சியை உண்டாக்கினர். அவர்களிடேயே நாம் தமிழர், நாம் சிங்களவர் என்ற உணர்ச்சி அன்று இருக்கவில்லை இன்றைய அரசியல் தலைவர்கள் சுயநலம் காரணமாக இத்தகைய வேறுபாட்டை மக்களிடையே பரப்பி மகத்தான தவறைப் புரிந்து வருகின்றனர். அவர் சிறந்த அரசியல் வாதியாக மட்டுமல்லாமல், சிறந்த கல்விமானுகவும், தத்துவ ஞானியாகவும் கொடைவள்ளலாகவும், சமயப்பற்றுடையவராகவும் இருந்தார்.

இவர் தமது இளம் வயதில் அரசியலில் புகுந்தார். இலங்கைத் தேசிய காங்கிரளின் தலைவராக இருந்தார். 1912ல் சட்ட சபைக்கு பட்டதாரிகளின் பிரதிநிதியாக தெரிவு செய்யப் பட்டார். அவர் எவருக்கும் தலைவணங்காத் தன்மை வாய்ந்திருந்தார். தேசாதிபதியை இராணி மாளிகையில் சந்தித்து மரியாதை செலுத்தத் தவறியதால் அவரைத் தேசாதிபதி நியமிக்க மறுத்தார். பின்பு சிங்கள நண்பர்களின் இடைவிடா முயற்சியால் அதே ஸ்தாபனத்திற்கே தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைச் சரித்திரத்தில் 1915-ம் ஆண்டு நடந்த சிங்கள முஸ்லீம் வகுப்புக் கலவரம் மிகவும் முக்கியமானதாகும் அக் காலத்தில் அவர் காட்டிய வீரமும், துணிவும் பாரட்டக் கூடியதாகும். பலவித அபாயங்களையும் எதிர்த்து இங்கிலாந்து சென்று தேசாதிபதியின் அநீதியை எடுத்தியம்பினர். அன்னர் இலங்கை திரும்பிய சமயம் அவரைக் குதிரை வண்டியில் வைத்து சிங்கள தலைவர்கள் இழுத்துச் சென்றனர். இதனால் சிங்களத் தலைவர்கள் எத்தகைய சிறந்த பண்புடையவர் என்பது பெறப்படும் சர்வ ஜன வாக்குரிமையைப் பெற்றுக் கொடுக்க டொனமூர் சட்டத்தை எதிர்த்து வாதாடினர். வகுப்பு வாதம் பிற்காலத்தில் தலைகாட்டக்கூடிய சாத்தியக் கூறுகளை அறிந்து அதை ஒழிக்கப் பாடுபட்டார்

இலங்கை மக்களின் கல்வியிலும் மிகுந்த பிரயாசை எடுத்தார். இன்றைய வாலிபர்களே நாளைய சமுதாயத்தை அமைப்பார்கள் என்பதை உணர்ந்த அவர்கள் மனதைப் பண்படுத்த சிறந்த கல்லூரிகள் அவசியம் என்பதை உணர்ந்தார். ஒரு நாட்டின் சுபீசம் மக்களின் கல்வியறிவைப் பொறுத்திருக்கிறது.

இலங்கையில் 16000 தமிழர் கப்பலேறிய கதை.

திரு. இ. நல்லதம்பிக்கு
அர்ப்பணம் செய்யப்பட்டன
"பதிப்புரிமை"

★

எழுதியவர்
செ. வைத்திலிங்கம்

பிழைகள் இருப்பின் மன்னிக்கவும்.

★

அச்சிட்டோர்:
சேன். ஜோசெப் பிரஸ், கொழும்பு-14.
1966

16000 தமிழர் இலங்கையில் கப்பலேற்றிய கதைக்கு

அணிந்துரை எழுதியவர்
கனகசபை JP

தமிழரின் சரித்திரமும் அவர்கள்பட்டதுன்பங்களையும் புஸ்தகவடிவமாக தமிழ் மக்களின் மானத்தைக்காக்க மதிப்பை வளர்க்க இனிய தமிழில் சரித்திரவடிவமாக ஒற்றுமை ஆசிரியர் திரு வைத்திலிங்கம் எழுதிய 16000 தமிழர்கள் கப்பல் ஏற்றிய கதைகளை வாசிக்க உணர்ச்சியையும் ஆர்வத்தையும் கொடுக்கின்றன.

ஆங்கிலத்திலும் 1956ல் 1958ல் நடந்ததுன்பங்களை படுபாதகக் கொலைகளை ஆர்வத்துடனும், உணர்ச்சியுடனும் எழுதியிருக்கிறார். இரு நூல்களையும் துணிந்து வெளியிட்டுள்ள திரு வைத்திலிங்கம் பாராட்டுக்கும் மதிப்புக்கும் உரியவராவார்.

தமிழர் சரித்திரத்திலே திரு. வைத்திலிங்கம் 1962ம் ஆண்டில் லண்டன் சென்று மகாராணியைச்சந்தித்தும் உலகத்தில் பல பாகங்களிலும் இலங்கையில் தமிழர்களுக்குச் செய்துவந்த அநீதிகளை பிரபலியப்படுத்தி ஆங்கிலத்திலும் தமிழிலும் நூல் வடிவமாக எழுதிய அவரின் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் இலங்கையில் இனவெறி ஆட்சியென்ற இரு தமிழ் ஆங்கிலப்புஸ்தகங்களைப்பற்றி பாராட்டினர்கள்.

உலகசபையில் இருந்து பல கடிதங்களும் இந்நூலில் எழுதியிருப்பதை பார்க்கலாம் உண்மையில் திரு. வைத்திலிங்கம் தமிழர் சரித்திரத்தில் நினைப்புக்குரியது 1915ம் ஆண்டில் இறந்த சேர் பி. இராமநாதர் சிங்களவர் சார்பாக லண்டன் சென்றதை திரு வைத்திலிங்கம் சிங்களவர் தமிழரை வதைக்கும் பொழுது லண்டன் சென்ற சரித்திரம் மறக்க முடியாததாகும்.

வருங்காலச்சந்ததி அறியவும் தற்சமயம் உயிருடன் வாழும் மக்கள் உணரவும் ஆசிரியர் எழுதிய நூல்களை ஒவ்வொரு மகனும் மகளும் படித்து உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

1956ல், 1958ல், தமிழ் மக்கள் இவ்வளவு இழுக்காக இருந்தும் வடக்கிலும், கிழக்கிலும் இன்னும் இருட்டில்தான் வாழ்கின்றார்கள் என்று துக்கத்தைக்கொடுக்கின்றன.

ஆசிரியர் முகவரை

இலங்கையிலேயே பிறந்து, வளர்ந்து படித்து, இனி-வாழ்ந்து வரவேண்டிய தமிழ்ச்செல்வங்களுக்கு இலங்கை ஆட்சித்துறை அலுவலகங்களில் தமிழ் இடம்பெறாத ஒரே காரணத்திற்காக சிங்களம் படிக்காத தமிழ் நன்கு படித்தவர்க்கு, இளஞ்சிறார்க்கு, எதிர்கால மக்களுக்கு வேலை வாய்ப்போ, மனித உரிமையோ அல்லது இலங்கையில்

தமிழன் என்று சொல்லுவதற்கு இடம் உண்டோ, இல்லை-யோ என்ற காரணத்தால் இந்நூல் எழுத வேண்டிய கட-மையாயிற்று.

இலங்கையில் தமிழ்த்தலைவர்கள் திருவாளர் பொன். னம்பலமும், செல்வநாயகமும் சுயநலத்தில் வாழ்ந்துவரும் பொழுது மக்களின் உரிமை இழக்கின்றகாலத்திலே. தமிழர் கள் குடியிருக்கும் நாட்டிலே தமிழினத்திற்கு வாழ இடமில், லை யென்றபடியால் உணர்ச்சியுடன் 16000 தமிழர்களை பயத்திலும், கொடுமையிலும் கப்பல் ஏற்றிய கதைகளை சில கண்ணுல்க்கண்டும், சிலர்களை துன்பப்பட்டவர்களின் சொற்களைக்கேட்டும், சிலதுகள் விற்முச்சி எழுதிய நூல் பிரகாரம் இச்சிறு சரித்திரத்தை எழுதிவருவது ஏனெனில் இந்நாட்டுமக்களாகிய தமிழருக்கு பண்டாரநாயக்காவின் ஆட்சியில் அவர் மனைவியின் ஆட்சியில் செய்த கொலைப்-பாதகங்களையும், பொலீஸ் இராணுவம் செய்த கொடுமைக ளும், சிங்கள மக்கள் செய்த கொடுமைகளை இத்துணைக்கும் காரணம் ஆட்சியில் தட்டிக்கேட்கும் துணிவுடைய தலை வர் தமிழரில் இல்லாமையே திரு பொன்னம்பலம் பாராளு மன்றத்தில் தேர்ந்தெடுக்காத படியால் கண்களைமூடி, வா-யையும் மூடி பணம் சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார் ஆனல் திரு செல்வநாயகமும் அவரின் கட்சியும் அறிவீனத்தால் மக்களுக்கு அடியும், உதையும், கொலையும் கூட்டுக்குவித்து மகாபாதகங்களைச் செய்தும் திரும்பியும் 1960ம் ஆண்டில் இந்தபாதகச் செயல்களைச்செய்த கட்சியு டன் சேர்ந்து தமிழ்மக்களை துன்பங்களில் வாழ்வதற்கு அணைகட்டி உதவி புரிந்தபடியால் ஆசிரியர் பிறநாடுகள் சென் று சென்னை முதல் மந்திரி காமராஜரையும் கண்டு, இறந்த பண்டிதர் நேருவையும் கண்டு ஐ. நா. சபைக்காரியதரிசிக்கும் அறிவித்து, இங்கிலாந்து மகாராணிக்கும் அறிவித்து, ஏனைய நாடுகளில் சொற்பொழிவாற்றிய கதைகளை இந்நூலில் வாசகர்களுக்கு கண்ணுடிபோல் மினுங்க எழுதியிருக்கின்-றேன்.

இந்நூலில் காணப்படுபவையுள் பெரும்பகுதி 1956ல் 1958ல், இராணுவ, கடற்படை, போலீஸார்மூலம் இழைத்த அக்கிரமங்களினுல் தாங்கொணுது சதிரமலைக்கந்தசுவாமி யிடம் சென்று இரண்டு நாள் இராமகிருஸ்ணர் மடத்தில்

தங்கி விரதம் இருந்து இவரின் வரத்தைப்பெற்று 1962ம் ஆண்டு ஜனவரிமாதம் 4ந் திகதி இலங்கையை விட்டு இந்தியா சென்று பிச்சை எடுத்து மலாய் நாட்டிற்குச் சென்று அங்கிருந்து 1962ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ந் திகதி விமானமார்க்கமாக லண்டன் சென்று இராணிக்கு கொடுத்த மகஜரின் வரலாறும், பத்திரிகைகள் எழுதிய வரலாறுகளையும் இந்நூலில் எழுதியிருப்பவைகளை வாசகர்கள் உணர்ச்சியுடன் படித்து வரும்காலத்தில் நன்கு பேணி மனிதவர்க்கத்தில் சுயநலமில்லாத பணத்தைக்குவித்து பாவிகளாயில்லாத தலைவர்களைத்தேடி தமிழர்களை இந்நாட்டு மக்களாய் வாழ்வதற்கு இடம் எடுத்துக்கொடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

1956 லும், 1958லும் ஏற்பட்ட அமளியால் இலங்கையில் பலநூற்றாண்டுகளாக தமிழர்களுக்கும், சிங்களவருக்குமிடையே வளர்ந்து ஒன்றுகலந்த உறவு முறிந்தது மதிப்புமறைந்தது, நல்லெண்ணம் நலிவுற்றது இலங்கை வடக்குக் கிழக்குப்பகுதிகளில் 1958ல், 1959ல், 1960ல், 1961ல், நடந்த அமளியால் எண்ணற்ற மிழ்மக்கள் உயிர்நீத்தனர் அவர்களுள் பொருள் இழந்தோர், மனைவி மக்கள் சுற்றத்தை இழந்தோர், வாழ்விழந்தோர் ஏராளம். கொழும்பு, அநுராதபுரம், பொலன்நறுவை, களுத்துறை, பதவிய யென்னும் ஏனைய இடங்களில் சிங்களவர்கள் தமிழர்களுக்குச் செய்த இனவெறி ஆட்சியைப்பற்றி முன் எழுதிய நூலிதல்1962ல் எழுதிய பிரகாரம் வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளை எவ்வளவு மறைக்கமுனைந்தும் உலகமக்கள் அறியக்கூடிய பக்குவத்தில் எல்லாநாடுகளும் சென்று பத்திரிகைகள் மூலமாக பிரசுரித்ததை வாசகர்கள் அனேகர் அறிவீர்கள்.

1958ல் ஐக்கிய தேசியக்கட்சியும் சியரெட்ட என்னும் பத்திரிகையில் எழுதிய கொடூரமான வார்த்தைகளை இறந்த பண்டாரநாயக்காவிடம் எடுத்துச்சென்று காட்டிய பொழுது பொலீஸ் ஸ்பெசல் கிளையில் இருக்கும் சி, ஐ. டி. நாணயக்காரு என்னிடம் வந்து மூன்று நாளாக வீளங்கி ஐக்கியதேசியக்கட்சி ஜே. ஆர். ஜயவர்தனவுக்கு எச்சரிக்கை பண்ணினார். 1958ல் நடந்த படுபாதகக் கொலைகளுக்கும், வேண்டுமென்று தீவைத்துப்பொசிக்கியதிற்கும் சொத்துக்களை

சூறையாடியதிற்கும் காரணம் மறைந்த பண்டாரநாயக்கா-வின் ஆட்சியும், ஆட்சி இயங்க ஆதாரமாக இருந்த எம். ஈ. பி. யு மேயாகும். ஆனால் 1961ல், 1962ல், இராணுவம் செய்த கொடுமைகளுக்கு ஆதரவு கொடுத்த செல்வநாயக-மும் அவரின் கட்சியுமேயாகும். இத்துணைக்கும் காரணம் தமிழர்களின் கட்சிகளேயாகும். நன்றி இல்லாத தமிழர்கள் திரு சுந்தரலிங்கத்தை ஒதுக்கியது மிகவும் துரோகமாகும் 1958ம் ஆண்டில் திரு சுந்தரலிங்கம் பாராளுமன்ற அங்கத்த-வராக இருக்காது போனால் வவுனியா, கிளிநொச்சி, மற்றும் அக்கம் பக்கத்தில் இருந்த தமிழர்களை சுட்டுப்பொசுக்கி சூறையாடி இருந்திருப்பார்கள்.

1958ல் இருந்து மனைவி, மக்கள், வாழ்விழந்து இன்று சோற்றுக்கின்றி நாதியற்று கிடப்பதற்கு வழிவகுத்து விட்ட இலங்கை சுதந்திரக்கட்சியுடன் தமிழர் நலன்காக்க வேண்டி இயங்கிவந்த கொடிய தமிழரசுக்கட்சியே தமிழி-னத்தை இக்கீழ்மையான நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்-றார்கள் அன்று கச்சேரியில் அசாங்க அதிபர் திருவாளர் சிறீகாந்தா அரசாங்க பதவி ஏற்றியதை கொழும்பு நகருக்கு வரச்செய்ததும் இத்தக்கொடிய பாதகர்கள்தான்!

ஆசிரியர் தமிழன் என்ற ஆர்வத்தைக்கொண்டு இந்த முகவுரையை வாசகர்களுக்கு எழுதுகின்றேன். ஏனெனில் ஐந்து மக்கள் இருந்தாலும் வாழ்விழந்த இரு சகோதரிகள் இருந்தாலும் வெகுசீக்கிரத்தில் தமிழினத்தை சிக்களில் விடுத-லைசெய்து தமிழ்பாசையை சரிவரப்பாவிக்காது போனால் எனது உயிரையே தியாகம் செய்வதற்கு உத்தேசித்துள்-ளேன் ஏனெனில் 4 500 ஆண்டுகளுக்கு முன்பாக முதல், முதல் ஆட்சி இலங்கையிலேயே கடைச்சங்ககாலத்தின் போதும் தமிழரே முதல், முதல் இலங்கையின் குடியேறி பாண்டிய அரசின் கீழ் அரச சபை அமைத்தது பாண்டி. ஆட்சி செழிப்புற்றிருந்தது சிங்களவர் எனப்படுபவர் கி. மு. 6ம் நூற்றாண்டில் வங்காளத்திலிருந்து வந்து சேர்ந்தனர் அகதிகளாக தமிழர்களில் வரவேற்கும் தன்மையால் அகதி-கள் எண்ணிக்கை கூடிற்று அதே நேரத்தில் தமிழர்களின் எண்ணிக்கை குறைவுற்றது அகதிகள் தமிழரை வம்புக்கு இழுத்தனர் அவர்களுக்கு அமைந்த சூழ் நிலையின் துணையால் சிங்கள அரசரும், தமிழ் அரசரும் யாழ்ப்பாணம் கண்டி ஆகிய இடங்களை மாறி, மாறி ஆண்டுவந்தனர். கடைசியாக பிரிட்டிஸ்காரரும், டச்சுக்காரரும், இலங்கையில் ஆட்சி

பெறும் பொழுதும் தமிழ்ப்பாஷை இந்நிலையில் இருக்கவில்லை தமிழ்மக்கள் இந்நிலையில் பயத்துடன் வாழவில்லை.

இலங்கைத்தீவில் தமிழருக்கு உரிய உரிமை மறுத்து-விட்டால் உலகப்பேரவை ஐ. நா. சபை உரிமைப்பத்திரத்-தில் கூறப்பட்டுள்ளபடி இன, மத, பண்பாடு மொழிவாரி சிறுபான்மையினர் தம் குறித்துத்தாமே தமது முடிவான தீர்மானத்தை முடிவுசெய்வதற்கு எத்தனித்தல் வேண்டும் அதற்கு பொன்னம்பலமும், செல்வநாயகமும் எல்லா அம்பலங்களும், நாயகங்களும் தமிழரை நடுத்தெருவில் தவிக்கவிட்டு தங்கள் சுயநலத்தை நாடி பணத்தைச்சேர்த்து தமிழினத்தை நடுக்கடலில் தத்தளிக்க விட்டவர்களே இன்-னும் பாதகச்செயல்களைச்செய்யுமாறு பாராளுமன்ற உறுப்-பினர்களாகத்தேர்ந்தெடுத்தது ஏன் ?

வாசகர்களே எனது மனம் கலங்குகின்றது; நான் 36 நாடுகள் மேல் நாட்டிலும், கீழ்நாட்டிலும் பார்த்த அளவில் தென் இந்தியாவில் உள்ள தமிழர்களும், இலங்-கைத்தமிழர்களும் நாணம், வெட்கம் இன்றி சுயநலத்தில் வாழ்கின்றதை பளிங்குபோல் தெரிகின்றது.

1956ல் இருந்து 1962 வரை தமிழ்மக்களுக்கு இவ்வளவு இழுக்கான செய்கைகள் செய்தும் இந்தப்போலித்தலைவர்-கள் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்ச்சந்ததி சிறப்பாக வாழ்வதற்கு, தொழில் கம விருத்திசெய்யாமல் இலங்கைத்-தெற்குப் பகுதிகளில் மாடிவீடுகளுடன் தென்னந்தோட்-டம், தேயிலைத்தோட்டம் அந்நிய நாடனம் சொண்டுகளுக், கும் முகங்களுக்கும் சிவத்தப்பூச்சுக்களைப் போட்டுக்கொண்டு நாடனம் ஆடிக்கொண்டிருக்கும் தமிழ்மக்களுக்கே இதை எழுதுகின்றேன். இதை உணர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் வரும் சந்ததி நன்மை அடைவதற்கு இந்த ஊண்டுகோள் ஊண்டி வருகின்றேன் தமிழ்மக்கள் இதை உணர்வார்களா அல்லது என்னை ஒரு மடையன் என்று சொல்லுவார்களா ?

ஐந்து நூறு ஆயிரம் வருசங்களுக்கு முன்பாக படைத்த சைவர்களும், தமிழர்களும் கலப்புச்சாதியான மக்களுக்கு பயந்து, ஒடுங்கி வாழ்வதிலும் பார்க்க மடிந்து விடுவது நன்று.

சரித்திரம் எப்பொழுதும் புஸ்தகவடிவமாக இருத்தல் வேண்டும், ஏனெனில் தமிழ்மக்களுக்கு 1956ல் இருந்து 1962 வரை செய்த அட்டூழியங்களை வரும் சந்ததி பார்க்க வேண்டும்.

ஆண்டவனுடைய கிருபையால் என்னைப்பெற்ற மாதாவின் கர்ப்பால் இவ்வளவு ஆர்வத்தையும், தமிழ்ப்பாசத்தை கொடுத்துச்சென்ற தாயார் தனது வீரமகனை கண்ணுற்றுப்பார்க்கவில்லை உயிருடன் இருக்கவில்லையே என்று எனது சஞ்சலம்.

மாதாபிதா செய்யும் புண்ணியம் தான் பிள்ளைகள் மிகவும் ஊக்கத்துடனும், பாசத்துடனும், வீரத்துடனும் வாழ்க்கையில் வாழ்வார்கள்.

இப்புஸ்தகவடிவை எழுதுவதற்கு உதவிபுரிந்த எனது மகன் இராசலிங்கம் எனது சேவைகளை உணர்ந்து நன்மையான வாழ்க்கையில் வாழ்வார் என்று ஆண்டவனைப்பிரார்த்திக்கின்றேன். மானிடவர்க்கம் ஆண்டவன் பற்றற்று சிறப்பாக வாழவே முடியாது. வாசகர்களே இந்நூலைப் படித்து உங்கள் மனமார்ந்த உணர்ச்சியை உனர்வீர்கள் என்று எண்ணுகின்றேன்.

தமிழர்களைப்பற்றி இத்துனை ஆர்வத்துடன் - ஆத்திரத்துடன் போராடி வருவது ஏனென விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன். எனினும் சில சொற்கள் : தமிழர்கள் மரபுரிமை, வரலாற்று முக்கியத்துவம் பெற்றவர்; தமிழர் மொழியும் அம் மொழி பெற்றிருந்த வளமும் அவ்வளத்தால் விளைந்த எண்ணற்ற இலக்கியங்களும், பாண்டியன் ஆட்சி இந்தியாவிலும் - இலங்கையிலும் கி. மு. 4500 ஆண்டுகளுக்கு முன்னம் நிலவியிருந்தபோதே புகழ் பெற்று விளங்கின அதோடு நிற்காது தமிழ் இலக்கியங்களும் தமிழர் பண்பாடும் வரலாற்று புகழ் பெற்றவை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டின் சுதந்திரம் அந்நாட்டு மொழி இலக்கியங்களுக்குள்ள சுதந்திரத்தைப் பொறுத்தே என்பது உலகொப்பும் உண்மை !

உலகின் பல பாகங்களிலும் பல கோடி மக்களால் பேசப்பட்டு — படிக்கப்பட்டு - எழுதப்பட்டு வருகிற மொழியாகும் தமிழ் மொழி. இலங்கையில் மட்டுமே 62 லட்சம்

மக்களால் பேசப்படும் மொழியாகும் சிங்களம் மொழி! ஒரு சீரான பல்வேறு மொழிகளின் கலப்பு மொழியுமாகும் என்பதை மறுக்க முடியாது எவராலும் ! 1815ம் ஆண்டு மார்ச் மாதம் 3ந் திகதியன்று ஸ்ரீ விக்கிரமராஜசிங்கம் கண்டியில், பிரிட்டிஸ் அரசின் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட போது மாட்சிமை தங்கிய மன்னரும் சிங்கள அமைச்சர்களும் தமிழிலேயே கையெழுத்திட்டனர் என்பதை உலகம் மறந்திருக்காது இன்னும் !

தமிழகத்தில் பரந்து பல பாகங்களிலும் நெடுங்காலம் வாழ்ந்து வந்தவர் தம் வழி வழிதான் இன்றைய சிங்களவர் என வரலாரு கூறுகிறது. இந்த ஒரு வரலாற்று சான்றினைக் கொண்டேனும் கூட தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக்கலாம் என்பதே நமது விழைவு ! இந்தியாவில் பதினான்கு மொழிகள் இருந்தும், தமிழகத்தில் ஏறத்தாழ 3700 அரசாங்க அலுவலகங்களில் திமிழ் அரசாங்க மொழியாக்கப் பட்டு அலுவல்களனைத்தும் தமிழலேயே நடைபெற்று வருகின்றன ! சீன – ஆங்கில – மலாய் - மொழிகளுடன் தமிழும் ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது மலேயாவில்! ஸ்விட்சர்லாந்து நாட்டில் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இயங்கி வருகின்றன !

இலங்கையில் சிங்கள மொழியைவிட தமிழே பன்னெடுங்காலந்தொட்டு வழக்கில் இருந்து வந்திருகிறது என்பதை வரலாற்று மரபுப்படி உலகுக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது ; உணர்த்த முடியும் ! இவையெல்லாம் மனத்திற்கொண்டு பார்க்கும்போது தமிழர் தம் மனம் புண்பட்டு தாங்கொணாத் துயரம் அடைகின்றனர் இன்றைய ஆட்சியால் !

முந்தின ஆட்சியில் தலைவிருத்தாடும் இனவெறி – கொடுமை இனியும் நடைப்பெற்று வருவதை - தென்னிந்திய - தமிழக பெருங்குடி மக்களும், தமிழக அரசியல் கட்சிகளும் பார்த்துக்கொண்டிருப்பதென்பது பகற்கனவு !

ஏன் ? மனித உரிமைகள் பறிக்கப்படுவதால் ! நாடற்றவர் களைக் காட்டிலும் — அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள் நடத்தப்படுகிறார்கள் இந்த அநீதிகளை — இன வெறியால் இழைக்கப்படும் கொடுமைகளை இந்நூல் வாயிலாக படிக்கும் பண்புள்ள நீங்கள், சுண்டைக்காய் நாட்டில் - குட்டித் தீவில் தமிழர் தம் அறப் போராட்டத்திற்கு — உரிமை பெறும் போராட்டத்திற்கு உங்கள் ஆதரவை - அனுதாபத்தை நல்கும்படி இறைஞ்சி வேண்டுகிறேன் !

இத்துணைக்கும் மேலாக அந்த இனவெறி ஆட்சி செய்யித் தாள்களுக்கெல்லாம். வர்ப்பூட்டு பூட்டியிருக்கிறது. கருங்கச் சொல்லின், உருமைக் குரல் எழுப்பும் தமிழர் வாயை மூடிவிட்டது ! இதை எதிர்ப்பதில் தவறு? எதிர்த்து போராடாமலிருப்பது முறையா ? பத்திரிகா தர்மத்தைப்பற்றி இந்திய பிரதமர் பண்டித நேரு அவர் களின் கருத்துரையும் இந்திய உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன நீங்களும் படித்துணர்வதற்காக !

இந்திய உயர்நீதி மன்றம் கூறியுள்ள தீர்ப்பின்படி, என் உள்ளக் கிடக்கையை, அதன் பதிப்பாக நூல் வடி விலும் கொண்டுவர முடிவுசெய்துதான் இந் நூலை உங் கள் கரங்களிலும் தவழ விட்டிருக்கிறேன் — தங்கள் மனத்திலும் தவழட்டும் என்ற ஆசையோடு !

கம்யூனிஸ்ட் தலைவர் திரு ராமமூர்த்தி தனது இலங் கை சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்ததும் வராததுமாய் வெளியிட்ட அறிக்கையில், இன்றைய ஆட்சியை கவிழ்க்கவேண்டும் — அல்லது ஆட்சிபீடத்தை விட்டு இறக்கவேண்டும் என்ற மாறுன - இடது சாரி கருத்தான - நோக்கத்தோடு, தமிழர் தூண்டிவிடப்பட்டுள் ளனர்; தவறான போக்குக்கு கற்பிக்கப்பட்டுள்ளனர்' என்று திரித்துக்காட்டியுள்ளார் உண்மைக்கு மாறாக.

தோழர் இராமமூர்த்தி அவர்கள் வெளியிட்ட அறிக் கையையும் இந் நூலில சேர்த்து வெளியிட்டுள்ளேன் — நீங்கள் மட்டும் படித்தறிவதற்காக அல்ல, தோழர் ராமமூர்த்தி சார்ந்துள்ள பொதுவுடமைக் கட்சியிலுள்ள தன் மதிப்பு — கொள்கை குன்ற — வழுவா — தோழர்களும் அவர் அறிக்கையை - தமிழர்க்கு அவர் தம்

கோணிக்கைக்கு — உண்மைக்கு மாறுக திரித்துரைத்த கருத்துரையை - படித்து பார்க்கட்டும் என்பதற்காகத்தான் அவ்வறிக்கை வெளியாகும்போது நான் சென்னையில் தானி ருந்தேன் .

நானே வியந்தேன் தோழர் ராமமூர்த்தியின் அறிக் கையைப்பற்றி ! அவருடைய 30 மணி நேர - குறுகியகால இலங்கை சுற்றுப் பயணத்தில், அவருடைய இலங்கைத் தோழர்களான திரு பீட்டர் கெனமன், டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்க, திரு பிலிக்ஸ்டையஸ் பண்டாரநாயக ஆகிய மூவரை சந்தித்ததில் அவர்கள் சொன்ன தவறுன - தமிழர் மீது பழி சார்ந்த சில வார்த்தைகளைவிட, அவர் தவறுக அறிக்கை வெளியிட்ட கூற்றுக்கு ஆதாரமாக சேகரித்த உண்மைகள் ஏதேனும் உண்டா என்றால் இல்லை ; இற்றை ஆட்சியின் வரலாற்று சான்றுடன் ஒப்பிட்டுக் காட்ட வேண்டுமானால், இரஷிய நாட்டு மக்களின் சுதந் திரத்திற்காக எழுந்த இரஷ்ய புரட்சிக்கு வழி வகுத்து அழிந்தொழிந்த கொடிய ஆட்சியின் நிலைக்களனை மன் னர் ஜார் ஆட்சியைத்தான் ஒப்பிட்டுக் காட்டமுடியும் !

இலங்கை எடுத்த நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கப் பட்டது இலங்கையின் பயனற்ற - நியாயமற்ற பட்டாள போலீசுத்துரை மூலமாக எடுத்த நடவடிக்கை, திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சியின்மீது சினத்தை தூண்டி விட்டு குழப்பத்தை - அமைதியின்மையை வெறுப்பைத் தான் உண்டாக்கிவிட்டதே தவிர வேறொன்றுமில்லை.

தமிழ் தலைவர்கள் இலங்கையில் மக்களை ஏமாற்றுகி றார். தமிழர் அடிமையாகவாழ்வதற்கு ஆசைகொண்டவர் தமிழர் தாம் இன்று இலங்கையில் நடக்கும் இனவெறி ஆட்சிக்கதைகளை ஆக்கி முன்வைக்கிறேன் தமிழரின் ஒற் றுமை இல்லாதபடியால் தமிழர் உரிமை அற்று தவிக்கி றார்கள். கண்ணீர்வடிக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி அரசியாரிடம் எடுத்துக் கூற இலங்கைத்தமிழர் திருவைத்திலிங்கம் லண்டன்செல்வார்

ஜெனிவா, லண்டன், ஐ. நா. வுக்குச்செல்லும் வழியில் சிங்கப்பூரில் முரசுவுக்குப்பேட்டி 8 - 10 - 1962.

இலங்கையில் வாழையடி வாழையாகப் பிறந்து வளர்ந்து வாழும் இந்திய வம்சாவளியைச்சேர்ந்த லட்சக்கணக்கான தமிழர்கள் 'நாடற்றவர்கள்', என்ற நிலையை அடைந்துள்ளதோடு ஐ. நா. வின் மானிட உரிமைசாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இவர்களின் இந்த அவல நிலைக்குப்பரிகாரம் காணவும் இவர்களின் வருங்காலச்சந்ததிகள் உரிமையுடன் வாழ வழி செய்யும் பொருட்டும் நான் மாட்சிமை தங்கிய எலிசபெத் அரசியாரைப் பேட்டி கண்டு இலங்கைக்கு விசாரணைக்குழு அனுப்பி விசாரித்து இலங்கை வாழ் தமிழர் பிரச்சினைக்குத்தீர்வு காணுமாறு வேண்டுகோள்விட லண்டன் செல்ல விருக்கிறேன். பின்னர் ஜெனிவா, மற்றும் ஐ. நா. வுக்கும் சென்று இலங்கை வாழ் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவு திரட்டப் போகிறேன்.

இலங்கை வாழ் தமிழர்களின் தலைவரும், பத்திரிகை ஆசிரியரும், 'இலங்கையில் இனவெறி ஆட்சி என்ற தமிழ் நூலையும் 'தி ரேஷியல் டிஸ்கிரிமினேஷன் இன் சிலோன்' என்ற ஆங்கில நூலைப்பிரசுரித்தவரும் தமிழ்ப்பெருமக்கள் பால் எல்லையில்லா பற்றும் பாசமும் கொண்டவருமான

திரு: எஸ். வைத்திலிங்கம் அவர் இங்கு முரசு நிருபருக்கு அளித்தபேட்டி ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவித்தார்:

திரு வைத்திலிங்கம் அவர்கள் பிரசுரித்ததாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரு புத்தகங்களிலும் இலங்கை வாழ் தமிழர்கள் வாழ்க்கை வரலாறு அவர்களின் இன்றைய அவலநிலை ஆகியவை குறித்து இந்திய அரசியல் தலைவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

திரு. வைத்திலிங்கம் அவர்கள் மேற்கொண்டுள்ள இந்த அறப் போராட்டத்திற்கு சுதந்திரக்கட்சித் தலைவர் திரு ராஜாஜி, சென்னை மேயர், திரு குசேவர், கேரள கவர்னர் வி. வி. கிரி ஆகியோரும் ஆதரவு தெரிவித்து ஆசி கூறி எழுதிய கடிதங்களையும், திரு. வைத்திலிங்கம் அத்நூலில் பிரசுரித்துள்ளார்.

அரசியல்க்கட்சிசார்பு இல்லை

சமார் இரண்டு வாரங்களுக்கு முன் இங்குவந்துசேர்ந்த திரு வைத்திலிங்கம், சிங்கப்பூரிலும், மலாயாவிலும் வாழும் தம்முடைய நண்பர்களையும் உறவினர்களையும் சந்தித்து விட்டு லண்டன், ஜெனிவா நியூயோர்க் செல்வதே தம்முடைய நோக்கம் என்று குறிப்பிட்டார். தம்முடைய இப்போதைய மலாயா, சிங்கப்பூர் விஜயத்தில் எத்தகைய அரசியல் நோக்கமும் கிடையாது என்றும் தாம் எந்த அரசியல்க்கட்சியின் சார்பிலும் உள்ளவர் அல்ல என்றும் இது சம்பந்தமாக சிலர் கொண்டுள்ள தவறான கருத்தைப் போக்கவே தாம் இதை வலியுறுத்திக்கூறுவதாகவும் சொன்னார்.

தமிழர்களின் தொல்லை

இலங்கையில் சிறுபான்மையோராக உள்ள தமிழர்களுக்கு உள்ள தொல்லைகள் யாவை எனகேட்டதற்கு திரு வைத்திலிங்கம் அளித்த பதிலாவது :

'இலங்கையில் உள்ள சிறுபான்மையோருக்கு குறிப்பாகத்தமிழர்களுக்கு மானிட அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன இந்திய வம்சாவளியைச்சேர்ந்த நாடற்றவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது.

'சர்க்கார் மான்யம் பெறும் பள்ளிகளில் கல்வி பயி லும் பொருட்டுத்தங்களின் குழந்தைகளைக்கூட அவர்களால் சேர்க்கமுடியாது உணவுப்பொருள்களைப்பெறுவதற்கான ரேஷன் காடுகளைக்கூட அவர்களால் பெறமுடிய வில்லை'

கவனக் குறைவு

திரு. வைத்திலிங்கம் தம்முடைய பேட்டியின்போது 1952ம் வருடத்தில் இலங்கையில் இந்தியதூதராக இருந்த திரு. தேசாய்க்கும், சேர் ஜான் கொத்தலாவலைக்கு இடை யே ஏற்பட்ட ஒப்பந்தத்தைப்பற்றியும் எடுத்துக்கூறினார் இலங்கையின் 'நாடற்றவர்' பிரச்சினையில் இந்திய அரசாங் கம்போதிய கவனம் செலுத்த வில்லை என்றும் இந்தியப் பிரதமர் நேரு இப்பிரச்சினையில் வீணுகக்காலம் கடத்தி னத்தார் என்றும் சொன்னார்.

ஒரு சிலரின் அவதிக்காக

தலை முறை தலை முறையாக இலங்கையிலேயே பிறந் து வளர்ந்து அதன் செல்வ வளத்திற்கும், சுபீட்சத்திற் கும் தங்கள் உழைப்பை அளித்த இலங்கைத்தமிழர் கள் இன்று நாடற்றவர்களாகி விட்டார்கள் என உணர்ச்சி வசப்பட்டுப்பேசிய திரு வைத்திலிங்கம், ஒரு சில சிங்கள வர்கள் வேலையில்லாமல் அவதியுறுகிறார்கள் என்றகாரணத் திற்காக இந்தத்தமிழர்களின் நல்வாழ்வும் உரிமைகளும் பறிக்கப்பட்டுவருகின்றார்கள் என்று சொன்னார்.

பொறுப்பாளிகள்

சிறு பான்மையோராகிய தமிழர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையை அடைவதற்குப் பதிவு இலாகாவைச்சேர்ந்த ஊழியர்களே பொறுப்பாளிகள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பிரஜைகளாகப்பதிவுசெய்துகொள்ள அவர்கள் மனுச் செய்தும் கூட அவர்கள் வேண்டுமென பதிவுசெய்யப்ப டாமல் ஒதுக்கித்தள்ளிவிடப்பட்டார்கள்.

இதற்கு இந்தியப்பிரதமரோ, இலங்கையில் அப்போது இருந்த அவருடைய பிரதிநிதியான ஹைகமிஷனரோ ஆட்சேபனை தெரிவிக்காததால் அவர்களின் உரிமைப்போ

ராட்டம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்று அவர்கள் மேலும் சொன்னர்

பாட்டாளித்தலைவர்கள்

பாட்டாளிகளுக்குப் பாடுபடுபவர்கள் எனத்தங்களைக் கூறிக்கொள்ளும் அரசியல்தலைவர்களான திருவாளர்; தொண்டமான் மற்றும் அசிசைப் போன்றவர்கள் பெரிய முதலாளித்துவ வாதிகள் என்றும் பொருளீட்டுவதையே பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள் என்று கூறிய திரு வைத்திலிங்கம் இதனால் தான் அரசியல்வாதிகள் தொழிலாளர்களின் தலைவர்களாகக் கூடாது எனத் தாம் எப்பொழுதும் கூறிவருவதாகச்சொன்னர்.

மலையாவுக்குப்பாராட்டு

இவ்விஷயம் குறித்து மலாயாவில் உள்ள நிலை பற்றிதங்கள் அபிப்பிராயம் என்னவென்று கேட்டதற்கு திரு வைத்திலிங்கம் மேலும் கூறியதாவது :-

'மலாயாவைப்பொறுத்தவரை நான் மகிழ்ச்சியடைகிறேன். இங்குள்ள பாட்டாளிகளின் தலைவர்கள் மிகவும் தாராளப் போக்குடையவர்களாக இருக்கிறார்கள். பாட்டாளிகளுக்குப் பல்வேறுவசதிகளை அவர்கள் தேடித்தந்துள்ளார்கள்'

'மலாயாவிலுள்ள தொழிலாளர்களாள் காற்சட்டை மற்றும் சப்பாத்து அணிந்து கையில் சிகரட்டின்னுடன் ஒரு துரை மகனைப் போல் இருக்கமுடியும். ஆனால் இலங்கையிலுள்ள தொழிலாளர்களால் ஒரு ஜோடி செருப்பைக்கூட வாங்க இயலாது என்றும் அவர் சொன்னர்

மலாயாவில் யாராகிலும் ஒரு பெடரல் குடிமகனாக விரும்பி அதற்கான தகுதிகளைப்பெற்றிருந்தால் அவ்வாறு ஆகமுடியும். ஆனால் இலங்கையில் இதுமுடியாது.

என்னுடைய லட்சியம்

'இலங்கையில் நாடற்றவர்களாக உள்ள தமிழர்களுக்குப்பிரஜா உரிமை மறுக்கப்படுகிறது என்ற குறை கூறலை விசாரித்து அதற்குப்பரிகாரம் காண இலங்கைக்கு விசார ணைக்குழு ஒன்றை அனுப்பிவைக்கும்படி லண்டனில்

இரண்டாவது எலிசபெத் அரசியாருக்கு வேண்டுகோள் விடுவது என்பது என்னுடைய முதல் நோக்கமாகும்.

'இலங்கை இன்னமும் ஒரு குடியரசாகாததாலும், காமன் வெல்தின் தகவி என்ற முறையில் இலங்கையின் கவர்னர் ஜெனரல் ஒருவரைப் பெற்றுள்ளதாலும் அவரால் இதைச்செய்யமுடியும் என நான் நம்புகிறேன்.

இண்டாவதாக தமிழர்கள் தாம் இலங்கையில் சிங்களவர்களுக்கு முன்னதாகக் குடியேறியவர்களாவார். தமிழர்களிவிட சிங்களவர்கள் அதிக எண்ணிக்கையிலானவர்கள் என்ற காரணத்தால் அந்த வகுப்பு வாத ஆர்ப்பாட்டக்காரர்கள் தமிழர்களின் தாய் மொழியாகிய "தமிழ்" மொழி அரசாங்க மொழியாக உபயோகிக்கப்படுவதையும் பறித்துவிட்டார்கள். தமிழ் மொழி அதிகாரத்துவமொழியாக ஏற்படவேண்டுமென்பதற்காகவும் நாம் போராட்டம் நடத்துகிறோம்.

ஐ. நா, வில் போராட்டம்

திரு. வைத்திலிங்கம் மேலும் கூறியதாவது:

ஐ. நா. வின் மானிட உரிமை சாசனத்தின் ஷரத்துப்படி நிரந்தர சிறுபான்மை சமுகத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் தாம் பிறந்த நாட்டில் தன்னுடைய தாய்மொழியை உபயோகிப்பதற்காகன தகுதியைப்பெற்றவராவார் சிங்கள மொழியைவிட தமிழ்மொழியே தொன்மைமிக்கதானதால் சிங்களமொழியோடு தமிழ்மொழியையும் ஓர் அதிகாரத்துவமொழியாக உபயோகிக்கப்படாதவரை நாம் ஜெனிவாவில் உள்ள வழக்கறிஞர்கள் கமிஷன்மூலம் ஐ. நா. சபையில் போராட்டத்தை நடத்தியே தீருவோம்.

சர் லெஸ்லி மன்ரோ உறுதி

'தம்முடைய மனித உரிமைக்காக ஐ. நா. நிறுவனத்தில் நம் முடைய தீர்மானத்தை முன்மொழிய உலக வழக்கறிஞர்கள் கமிஷனரின் பொதுக்காரியதரிசியான

சேர் லெஸ்லி மன்ரோவும் வாக்கிறிதி அளித்துள்ளார்.

ஐ. நா. பொதுக்காரியதரிசியின் கடிதம்

'இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை குறித்து நான் ஐ. நா பொதுக்காரியதரிசிக்குச் சில அறிக்கைகளை அனுப் பிவைத்தேன். அவ்வறிக்கை இவ்வாண்டில் மானிட உரி மைகள் கமிஷன் முன்னர் சமர்ப்பிக்கப்படுமெனத்தெரிவித் து எனக்கு ஐ. நா. பொதுகாரியதரிசியிடமிருந்து கடிதம் வந்துள்ளது. நான் அனுப்பிவைத்த நகல் ஒன்றையும் அவர் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஐ. நா. வின் தீர்மானன்

ஐ. நா. வின் பொருளியல் சமூகவியல் கவுன்சிலின் 782 - எப் (28) நீர்மானத்தின் ஷரத்துபடியாம் மானிட உரிமைகளைப் பெறுவதற்கான தகுதி பெற்றவராவார் என்றும் திரு. வைத்திலிங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நம் முடைய தீர்மானம் மும் மொழிப்பட்டதும் நான் ஐ. நா. சபை உறுப்பினர்களுக்குத்தனிப்பட்டமுறையில் தேநீர் விருந்துகளுக்கு ஏற்பாடு செய்து அவர்களைத்த னித்தனியே சந்தித்து இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை தமிழர்களின் கலாச்சாரம், மொழி ஆகியவை பற்றியும் எடுத்துக்கூறுவேன்.

தமிழ் ஒரு சர்வதேசமொழி

இத்தாலிய அறிஞர் ரெவரண் ஜீ யூ. போப், பிரிட்டிஷ் அறிஞர் டாக்டர் கால்டுவேல், பிரெஞ்சுப் பேரறிஞர் ரெவரண்ட்பெஷி ஆகிய மேல் நாட்டவர் திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் தங்கள் நாட்டு மொழியில் மொழி பெயர்த்து, தமிழருக்கு முக்கியமான சர்வதேசமொழி என்ற உண்மையை உலகினருக்கு எடுத்துக்காட்டினர்கள் என்பதையும் திரு வைத்திலிங்கம் குறிப்பிட்டுக்காட்டினர்.

ஐ. நா. சபைக்கு இலங்கை அரசு போகவிடவில்லை

தமிழர்கள் அனைவரும் ஒரு பிரிவினர்களாகத்தான் இருக்கவேண்டும் என்றும் இலங்கைத்தமிழர், இந்தியதமி ழர், மலாயாத்தமிழர் என்ற பிரிவினைகள் கூடாது என் றும் கூறிய திரு வைத்திலிங்கம் தம்முடைய லண்டன், ஜெனிவா ஐ. நா .விஜயத்திற்குப்பின்னர் நாடு திரும்பியதும்

எலிசபெத் அரசிக்கு யான் அனுப்பிய விண்ணப்பம்

தமிழர்களின் துயரை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்தல்

உள்நாட்டுச் சிக்கல் அல்ல என்று விளக்கம்

தமிழர்களைக் கொடுமைப் படுத்துவதை நிறுத்தும்படி இலங்கைத் தலைமை அமைச்சர் திருமதி பண்டாரநாயக்காவை பிரிட்டிஷ் அரசி வற்புறுத்த வேண்டும் என்று கூறியுள்ளேன்.

அரசி எலிசபெத்திற்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியுள்ளேன். இதன் பிரதிகள் ஐ. நா. பொதுச் செயலாளர், அமெரிக்கக் குடியரசுத் தலைவர், பிரிட்டன் தலைமை அமைச்சர், இலங்கையின் கவர்னர் ஜெனரல் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

"பல சந்ததிகளாக எங்கள் குடும்பத்தினர் இலங்கையில் இருந்து வருகின்றனர். ஆகவே அந்நாட்டில் தமிழர்களை இலங்கை அரசு நடத்தி வரும் முறை பற்றிய வீவரங்களை என்னால் நன்கு விளக்க முடியும்.

சிங்கள மொழியுடன் தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று வலியுறுத்தி இலங்கைத் தமிழர்கள் நடத்தி வரும் அறப்போரை ஒழிக்க இலங்கை அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழர்களை அழிக்கவும், அவமானப்படுத்தவும் கற்பழிக்கவும், சுட்டுக் கொல்லவும், கொள்ளை அடிக்கவும் கொடுமைப் படுத்தவும் இலங்கை அரசு துணிந்துள்ளது.

இலங்கை வளம் பெற்ற நாடாவதற்குப் பாடுபட்ட இலட்சக் கணக்கான தமிழர்களின் நிலை இப்பொழுது மிகவும் கேவலமாக இருக்கிறது.

" 99 சதவீதம் தமிழர்கள் உள்ள பகுதிகளிலும் ஒரே நாளில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று இலங்கை அரசு முடிவு செய்து அடக்கு முறையைக் கையாண்டு வருகிறது. தமிழர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் விலங்குகளைப்போல் நடத்தப்படுகின்றனர்,

இலங்கை அரசின் நடவடிக்கைகள் இன ஒதுக்கல் கொள்கையை நிறைவேற்ற முயலும் தென் ஆப்பிரிக்க அரசின் நடவடிக்கைகளை விட மோசமாக இருக்கிறது. ஆகையால் உங்கள் குடி மக்களாகிய எங்களைக் காப்பது உங்கள் கடமையாகும்.

நீங்கள் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் இலங்கையும் மற்றொரு காங்கோ, அல்லது லாவோசு போலாகிவிடும்.

அரசு அளவில் இச் சிக்கலைத் தீர்க்க நீங்கள் முயல வேண்டும். தேவைப்பட்டால், ஐக்கிய நாடுகள் சபையிலும் இச்சிக்கலை எழுப்பிச் சட்டத்திற்குட்பட்டு அறப்போரில் ஈடுபட்டுள்ள தமிழர்களைக் காக்கவேண்டும்.

இது குறித்து இந்தியத் தலைமை அமைச்சர் நேருவுக்கும் சென்னை முதல்மைச்சர் மூலம் ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் சிக்கல் உள் நாட்டுச் சிக்கல் அல்ல அது உலகச் சிக்கலாகும்.

திரு வைத்திலிங்கம், 17 - 6 - 1963
மகாராணிக்கு சிறுமான்மையினரின் மனித உரிமையை பற்றிய விண்ணப்பம்,

தங்கள் 11 - 6- 63 ல் எழுதிய மேற்கூறப்பட்ட விஷயம் பற்றிய கடிதம் கிடைத்தது என்றும் கூடிய சீக்கிரத்தில் பதில் அனுப்பப்படும் என்றும் உங்களுக்கு அறிவிக்கும் படி மகாதேசாதிபதி எனக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

வல்பிட்ட
மகாதேசாதிபதியின்
காரியதரிசி

மகாதேசாதிக்கந்தோர்
ராணிமாளிகை
கொழும்பு.

இலங்கைத் தமிழர் தூதுக் குழுவுக்கு யோசனை

இலங்கையின் கூட்டமைப்பு அரசே ஏற்றது

இராசகோபாலாச்சாரி

வலியுறுத்தல்

இலங்கைக்கு கூட்டமைப்பு அரசுதான் நியாயமான தும் நன்மை உண்டாக்கக்கூடியதுமாகும். என்று சுதந்திரக் கட்சித்தலைவர் திரு சி. இராசகோபாலாச்சாரி கூறினர்.

இலங்கைத் தமிழர் சார்பில் தம்மைச் சந்தித்த தூதுக்குழுவினரிடம் திரு இராசகோபாலாச்சாரி மேற் கண்டவாறு சொன்னர். அவர் மேலும் கூறியதாவது.

இலங்கைத் தமிழர் மீதும் அனைத்து இலங்கைக்கூட் டமைப்பில் தமிழ் பேசப்படும் தகுதி ஒரு தொகுதியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர்கள் நடத் தும் போராட்டத்தின் மீதும் நான் முழு அனுதாபம் கொண்டுள்ளேன் இலங்கைத் தமிழர்கள் அத்தீவில் பண் டைக் காலத்தில் இருந்தே வசித்து வருபவராவார். இலங் கை இன்று உள்ள நிலையை அடைவதற்கு அவர்கள் பெரும் பாடுபட்டனர். அவர்கள் நன்கு வரையறுக்கப்பட்டபகு தியில் வசிக்கின்றனர். இலங்கையின் நிர்வாகத்திற்குத் தீங்கு ஏற்படாத முறையில் அப்பகுதிக்குச் சுயாட்சி வழங் கவேண்டும் என்று அவர்கள் கேற்கின்றனர். இது ஒரு நியாயமான கோரிக்கையாகும்.

டில்லியில் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் அரசாங்கத் தினர் இலங்கைத் தமிழர்களுக்குத் தீவிர நண்பர்களாக இல்லாதது பற்றி வருந்துகிறேன். அரசாங்கங்கள் அர சாங்கங்களுடன் சேர்வதும் கிளர்ச்சியாளர்களையும் எதிர்ப் பாளர்களையும் புறக்கணிப்பதும் இயற்கையே உங்கள்

கோரிக்கைக்கு வட இந்தியாவை விடத் தென்னிந்தியா வில் அதிக அனுதாபம் இருக்கிறது. வட இந்தியரின் இந்தி பற்றிய கருத்து இலங்கையில் சிங்களம் தேசிய மொழியாக் இருக்கவேண்டும் என்ற போக்குக்கு முன்மா திரியாக இருக்கிறது.

ஐ. நா. வில் இலங்கைத் தமிழரின் கோரிக்கைக்கு அதிக ஆதரவு கிடைக்குமா என்பது ஐயமே. மேல்நாடு களைவிட ருசியப் பிரதிநிதிகளிடம்மிருந்து அதிக ஆதரவு கிடைக்கக்கூடும், ஏனெனில் பல தேசீயக் குடியரசுகளுக்கு ருசியக் கூட்டமைப்பில் சுய அட்சி உரிமை வழங்கியிருப் பதாக ருசிய கூறுகிறது, ருசிய அரசு அமைப்பு முறை இலங்கை அரசு அமைப்பு முறையிலிருந்து மிகவும் மாறு பட்டதாகும். ஆனல் பல்வேறு தேசீயப்பருதிகளுக்குச் சுயாட்சி உரிமை வழங்குவதென்ற அவர்களுடைய கொள் கை உங்களை அவர்களுக்கு நெருங்கியவர்ளாக ஆக்கக் கூடும் ஐ. நா வில் உங்கள் முயற்சிக்கு அவர்களுடைய உதவி கிடைக்கும்படி அது செய்யக்கூடும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியா இருந்தபோது இந்தியாவின் உள் நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதில் அமெரிக்கா முக்கிய பங்கு கொண்டது. ஆனல் மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது என்ற கொள்கை இப்பொழுதைப் போன்று அப்பொழுது அவ்வளவு உறுதி அடையவில்லை.

இலங்கைத் தமிழர் இக்கலை முதலில் காமன்வெல்த் கூட்டங்களில் வாதத்திற்குச் கொண்டு வருவது அதிகப் பயனுள்ளதாக இருக்கக்கூடும். காமன்வெல்த் அமைப்பு அனுவல் விதிகளுக்குக் கட்டுப்பட்டதல்ல ஆனல் ஐ. நா அவ்வித விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும்.

திராவிட முன்னேற்றக் கழக தலைவர்

திரு.

C. N. அண்ணாதுரை M.P

வேண்டுகோள்

இது உள் நாட்டுக் கலகமா ?

'இலங்கைத் தமிழர்களின் நிலையைப்பற்றிய உண்மைக்கள் அறிய குழு ஒன்றை ஐக்கிய நாட்டுச் சபை நிறுவ வேண்டும் — என்று வற்புறுத்த நீங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை மனப் பூர்வமாக பாராட்டுகிறேன் !' — தி மு கழகத்தின் பொதுச் செயலாளருக்கு இப்படி ஒரு தந்தி வந்திருக்கிறதாம். மேற்கண்ட தந்தியை லண்டனிலிருந்து, கடல் கடந்த இலங்கைத் தமிழர் நிறுவனத்தின் தலைவரான ராசகுமாரன் என்பவர் அனுப்பியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர் சீரழியும் கொடுமையை இன்று நேற்றல்ல ! ஆண்டுகள் பலவாக எடுத்தியம்பி வருகிறது ! மாநில அரசும் மத்திய அரசும் சிங்கள அரசை நேசபாசத்துடன் அணுகி, அந்த அவல நிலை அழியமுயற்சியில் ஈடுபடக்கூடாதா - என்றும் கேட்டிருக்கிறது. ஆனால் இப்போது நிலைமை மிகப் பயங்கர உருக்கொண்டுவிட்ட காரணத்தால், ஐ. நா. சபை தலையிட்டு ஆவன செய்யவேண்டும் என்று வற்புறுத்தியது.

கழகத்தின் இந்தத் தேவையான நடவடிக்கையை, உலகத்தின் பல பகுதிகளிலுமுள்ள தமிழர்கள் பாராட்டிக் கொண்டிருக்கையில், இந்திய உபகண்டத்தின் தலைவர்கள் தருகின்ற விளக்கங்கள் விசித்திரமானவை.

இலங்கைத் தமிழர் பிரச்னை உள்நாடு சம்மந்தப்பட்டது அதில் ஐ. நா. — வோ, நாமோ தலையிடுவதற்கில்லை' என்று கிருஷ்ணமேனன் குறிப்பிட்டதும் கவனிக்கத்தக்கது அதையேதான் மற்ற முற்போக்குத் தலைவர்களும் சொல்லுகிறார்கள் கேட்டு வேதனையுறுகிறோம்.

உள்நாட்டுப் பிரச்னை என்று ஒதுக்கிவிடக்கூடியதல்ல, இலங்கைத் தமிழர் அவதியை !

இலங்கை அரசு சில முற்போக்கான காரியங்களைச் செய்திருக்கலாம், அதனால் கண்ணை மூடிக்கொண்டு தமிழினத்திற்குத் துரோகமிழைத்துத் தனம் செய்து விட தினைக்கும் கடைந்தெடுத்த பிற்போக்குத்தனத்தை ஆதரிப்பது சிறிமாவோ ஆட்சியின் மீதுள்ள அந்தரங்க பாசத்தைக் காட்டுகிறதே தவிர, ஆராய்ச்சியைக் காட்டவில்லை இலங்கைத் தமிழர் கிளர்ச்சியும் அதற்கு அனுதாபம் காட்டும் இதர முயற்சிகளும் அர்த்தமற்றவை என்று கூறுவதால், உலகத்தின் பல கோடிகளில் வாழும் தமிழ் மக்களின் மனக்கசப்பு வலுக்கட்டாயமாக விலைக்கு வாங்கப் படுகிறது என்பது வெள்ளிடைமலை.

தமிழகத்திலிருந்து சென்ற தமிழினத்தாரை, சிங்களவர்கள் அழித்துவிடவேண்டும் என்ற முயற்சியில் வஞ்சகமாக ஈடுபடும்போது அதை உள் நாட்டுச்சம்பவம் என்று விட்டுவிடமுடியுமா ? கணவனும் மனைவியும் வீட்டுக்குள் அமைதியான வாழ்வு நடத்துகிறபோது - கொஞ்சிக் குலாவுகிறபோது அங்கு பக்கத்து வீட்டுக்காரனுக்கு வேலையில்லை ஆனால் மனைவியின் கழுத்தை அறுக்க கணவன் கொடுவாள் தூக்கிவிட்டபோது — அதைக் கண்ட மனைவி " ஐயோ ! ஐயோ ! என்னைக் காப்பாற்ற யாரும்மில்லையா ? என்று அலறுகிறபோது அது வீட்டு விஷயமாகாது ; பக்கத்து வீட்டுக்காரன் பாய்ந்துதான் தீரவேண்டும் !

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்திய அரசு தலையிடாவிட்டாலோ - அல்லது இதை உலக மன்றத்தின் முன் வைத்து நீதி கோராவிட்டாலோ நாளை நிலைமை இன்னும் விபரீதமாகும். தமிழர்கள் அனைவரும் அங்கிருந்து துரத்தப்பட்டால் பின் அவர்களின் கதி ?

' இலங்கை மண்ணில் சிங்களவர்களுக்கு இருக்கிற உரிமை தமிழர்களுக்கும் உண்டு. ஏனெனில், இரு இனத்தாருமே அங்கு சென்று குடியேறியவர்கள்தான். தமிழர்கள் தமிழகத்திலிருந்து சென்றார்கள் என்றால், சிங்களவர்கள் பீகாரிலிருந்து சென்றவர்கள் என்று கருதப்படுகிறது, அந்த இரு இனத்தாரில் யார் முதலில் குடியேறினார்கள் என்பதற்குத்தான் சரியான சரித்திர ஆதாரங்கள் கிடைக்

கவில்லை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அனுராதபுரம் என்ற இடத்தில், தமிழ் மன்னன் எலாரா சிங்கள குமாரன் டுட்டா கெமுனு என்பவரை சண்டைக் கழைத்திருக்கிறார். இது சரித்திர உண்மை.

ஆகவே, அங்கு வாழும் தமிழர்கள் எந்த வகையாலும் சிங்களவர்களைப் போலவே சம உரிமை உள்ளவர்கள் ஆகவே அவர்கள் தங்களுடைய மொழிக்காக - கலாச்சாரத்திற்காகப் போராட உரிமை கொண்டிருக்கிறார்கள்.

எனவே எப்படி தென்னப்பிரிக்காவிலே கருப்புத்தோலினர் தாக்கப்பட்டால், அது ஐ. நா. மன்றத்துக்குப் போகிறதோ அதைப்போல் இலங்கைப் பிரச்னையிலும் ஐ. நா. தலையிடுவது நீதிக்குக் கட்டுப்பட்டதே !

மேலும், எப்படி அங்கோலாவில் நடக்கும் அட்டூழியத்தை இங்குள்ளோர் கண்டிருக்கிறார்களோ அதைப் போல் தமிழினத்தார் தாக்கப்படுவதைக் கண்டிப்பது மனிதாபி மானத்திற்குக் கட்டுப்பட்டதே !

இலங்கைத் தமிழரால் முதல் மந்திரி காமராசரிடம் கொடுக்கப் பட்ட விண்ணப்பம்

சென்னை 28 - 8 - 61

தற்போது இந்நகரில் இருக்கும் இலங்கைத் தமிழர் திரு எஸ். வைத்திலிங்கம் என்பவர் இன்று முதலமைச்சர் திரு காமராசரை அவரின் இல்லத்தில் சந்தித்து இலங்கையில் தமிழர்படும் இன்னல்களை நீக்கி கோரும் ஓர் விண்ணப்பத்தை பிரதமர் நேருவிடம் கொடுக்கும்படி சமர்ப்பித்தார்.

முதலமைச்சர் காமராசர் தான் பிரதமர் நேருவை நேரில்க்கண்டு இவ்விண்ணப்பத்தைக் கொடுப்பதாகச் சொன்னார் என்று திரு எஸ். வைத்திலிங்கம் பின் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினார்.

இலங்கையில் தமிழர்கள் பெரிய அவமானப்பட்டு வருந்துகிறார்கள் என்றும் இலங்கை அரசாங்கத்தின் பார பட்சமான இன வெறிக்கொள்கையினால் பல இன்னல்க ளுக்கும் ஆளாகப்படுகிறார்கள் என்றும் அவ்விண்ணப்பம் கூறுகிறது, ஆகையால் இன்றைய இலங்கை அரசாங்கத் தில் சிறுபான்மையான தமிழர்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள்.

இலங்கை அரசாங்கம் சிங்களமொழியை தமிழ் மக் களின் விருப்பத்திற்கு மாறாக திணிக்க எத்தனிப்பதை யும் அவ்விண்ணப்பம் கூறுகிறது. தென் ஆப்பிரிக்காவின் இன வேற்றுமைக் கொள்கையைப்போல் இலங்கை அர சாங்கம் தமிழரை இன்னல்ப்படுத்துவது மிகவும் கூடாத செயலாகும்.

சிங்களத்தோடு தமிழும் அரசாங்க மொழியாகப்பட வேண்டும். பலாத்காரமற்ற முறையில் சத்தியாக்கிரகம் செய்யும் குற்றமற்ற இலங்கைத் தமிழரை துன்புறுத்த இலங்கை அரசாங்கம் முற்றும் ஆயுதம்தாங்கிய தரைப் படை, கடற்படையினரை ஏவி விட்டிருக்கிறது இலங் கைத்தமிழர் வேண்டுவது என்னவென்றால் தமிழ்மொழி கலாச்சாரம் என்பனவற்றைக்காப்பாற்றும் உரிமையையும் இலங்கையில் பொது நன்மைக்காக உழைக்கும் தமிழர்க்கு உரியபங்கையும் நீதி நியாயமான முறையில் இலங்கை அரசாங்கம் அங்கீகரித்ததாக வேண்டும் என்பதையே.

இலங்கை சிங்களவருக்கே என்ற பெயரில் இலங்கைத் தமிழர் சுடப்படுவதும் கொல்லை அடிக்கப்படுவது மல்லா மல் மானபங்கத்துக்கும் ஆளாக்கப்படுவதும் உண்மையில் ஒரு சதியே.

இலங்கை அரசாங்கத் தமிழருக்கு எதிரான அடக்கு முறைகளை நீக்கி தமிழையும் அரசாங்க மொழியாக அங் கீகரிக்கும்வண்ணம் செய்விக்க பிரதமர் நேருவை தமது நல்லெண்ணத்தை உபயோகிக்குமாறு திரு எஸ் வைத்தி லிங்கம் பிரதமர் நேருவை கோரினார். திரு எஸ் வைத்தி லிங்கம் திரு காமராசரை தான் இன்னும் ஒரு முறை சந்திக்க விரும்புவதாகவும் தேவையானால் பிரதமர் நேரு வை சந்திப்பதற்கு டெல்லிக்கு விமானமூலம் போக விருப்பதாகவும் கூறினார்.

திரு சி. வி. நரசிம்மன்

ஐ. நா. விசேஷ அரசியல் விவகார துணைச் செயலாளர் அவர்களிடம்மிருந்து வந்த மறுமொழி

20, ஜூலை. 1961.

திரு செ, வைத்திலிங்கம்
சென்னை.

அன்புடையீர் !

தாங்கள் தங்கள் கைப்பட எழுதிய ஜூன் 28ந் தேதியிட்ட கடிதமும், அச்சடிக்கப்பட்ட ஜூலை, 10ந் தேதியிட்ட கடிதமும் ஒரே தாளில் வரப்பெற்றேன்.

நான் ஏற்றுள்ள புதிய மாற்றுப் பதவி குறித்து தாங்கள் ஆசிச் செய்தியும் பாராட்டும் அனுப்பியமைக்கு நன்றி !

ஐ. நா. சபை பொதுச் செயலாளருக்கு தாங்கள் அனுப்பிய வேண்டுகோளைப்பற்றி பொதுச் செயலாளர் அது குறித்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத நிலைமை குறிந்து வருந்துகிறேன் ஆனால் தங்கள் வேண்டுகோள் ஐ. நா. பொருளாதார சமுதாய மன்றத்தின் தீர்மானம் 728 - F (XXVIII படி ஐ. நா. செயலகம்தான் நடவடிக்கை எடுக்க முடியும். என வே மேற்குறித்த விதிப்படி, தங்கள் வேண்டுகோளின் ஒரு பிரதியை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது தங்களுக்கு தக்க உதவிஉரையாகுக !

அன்புள்ள
சி. வி. நரசிம்மன்,
ஐ. நா. சபை விசேஷ அரசியல்
துணைச்செயலாளர்

இலங்கையில் வாழ் இலங்கை

தமிழர்களுக்கு 1958ம் ஆண்டு

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் சிங்களவரால் விடுத்த எச்சரிக்கை !

பாணந்துரையிலிருந்து கொழும்பு கோட்டைவரை வாழ்ந்து வருகின்ற தமிழர்களுக்கு, 1958ல் சில அரசியல் தலைவர்களும், சில புத்த சாமியார்களும் சேர்ந்து இடர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அஃதாவது, " தமிழர்களே! இலங்கையை விட்டு வெளியேறிவிடுங்கள் உங்கள் சொத்து சுதந்திரத்தை எல்லாம் விட்டு ! இன்றேல் நீங்கள் சுட்டும் கைகுண்டுகளால் தாக்கப்படும் அடித்து உதைக்கப்படும் அழிந்தொழிந்து விடுவீர்கள் ! எனவே இப்போதே வெளியேறிவிடுங்கள் ! மீறி இருந்தால் நீங்கள் பாதுகாப்போடு இருப்பீர்கள் என்று நினைப்பது தவறு, தமிழராகிய உங்கள் தலைகளை தீவட்டியாக்கி விடும் சக்தி எமக்கு உண்டு, உங்களைத் தொடர்ந்து, முஸ்லீம்களும், மலாய்களும் அழித் தொழிக்கப்படுவார். எமக்கு புத்த பிக்ஷுக்கள் ஆதரவு உண்டு. புத்தமதம் சாராத மக்கள் வாழாத — நூற்றுக்கு நூறு சிங்களவர்களே வாழும் புனிதமான நகரங்களாக கொழும்பு, அநுராதபுரம் கண்டி, குருணைக்கல், பொலன்னருவா ஆகியவை மாறவேண்டும் ! வெளியேறிவிடுங்கள் வேதனைக்குள்ளாகாதீர்கள், என்பதாகும் 1958ல் ஏப்ரல். மே ஜூன் மாதங்களில் அச்சிட்டு வெளியிட்ட, துண்டு வெளியீடுகளில் உள்ளவையே மேமா எடுத்துக்காட்டப்பட்டவை. அந்த துண்டு வெளியீடுகள் சிலவற்றை முன்னாள் முதலமைச்சராகயிருந்து மறைந்த திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டார நாயக்காவிற்கு அனுப்பியிருந்தேன். அது குறித்து அவர் எடுத்த நடவடிக்கை அந்தத் துண்டு வெளியீடுகளில் கூறப்பட்டுள்ளவைபோல் தலைவர்களை செய்யத் தூண்டியதுதான் !

இது நான் எதிர்பார்த்ததுதான். ஏனெனில், அவருடைய ஆட்சியில் — அவருக்குத் தெரிந்துதான் சூறையாடல், கொன்றுகுவித்தல்; தீயிட்டு பொசுக்குதல் ஆக அத்தனையும் நடைப்பெற்றது. அவர் விரும்பியதெல்லாம், சிங்களவர் வாழ்வாங்கு வாழவேண்டும், தமிழர் தாழ்ந்து வீழ்ந்து விட வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான்!

தென் ஆப்பிரிக்காவும் இலங்கையும்

'இன வெறி ஓங்குகிறது - முன்னால் ஐக்கிய பேரரசு (UK) பாராளுமன்ற உறுப்பினர் கூறுகிறார்

'இலங்கையில் தமிழர் நடத்தப்படுவதை குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமாயின் — காமன்வெல்த் நாடுகளில் தென் அப்பிரிக்காவில் நீக்ரோவினரை அலட்சியப்படுத்தி நடத்துகின்றதனிலும் மிக மோசம் என்று முன்னால் 'கன்சாவெடிவ் கட்சி பார்ராளுமன்ற உறுப்பினரான திரு. கிரிஸ்டோபர் ஹோல்லிஸ் என்பவர் 'ஸ்பெக்டேட்டர்' என்ற இதழில் விளக்கியுள்ளார்.

மேலும், ஆசிய மக்களுக்கு ஓரவஞ்சனை என்ற தலைப்பிட்டு எழுதியதில் 'காமன்வெல்த் நாடுகளுள் இனவெறி தலைதூக்கி நின்று தொல்லை கொடுப்பதில் - அரசாங்கத் தால்கூட தூண்டிவிடப்பட்டு மக்களுக்கு தொல்லைவிளை விப்பதில், தென் ஆப்பிரிக்கா மட்டுமே என்று கருதுவர் எல்லாம் தவறு மற்றுமொரு தென் ஆப்பிரிக்கா உண்டு அது தான் இலங்கை!, என்று ஒப்பிட்டுக்காட்டியுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன் தென் ஆப்பிரிக்காவின் நியாயமற்ற போக்கினைக் குறித்து எழுந்த கலந்துரையாடலுக்கு, திரு. ஹோல்லிஸ், டப்ளின் சென்றபோது தான் ஒரு கூட்டத்தில் கேட்டதையும் குறிப்பிடுகிறார்.

மேடை மீது பேசிய ஒருவர் - இலங்ஞர் தென் ஆப் பிரிக்க அரசாங்கத்தை வன்மையாக கண்டித்தது மட்டு மன்றி, தென் ஆப்பிரிக்க மக்கள் படுகின்ற தொல்லை பெரிதென்றாலும், இலங்கை தமிழர்கள் படும் தொல்லை களுக்கு சற்றுகுறைவே, என்றுராம். ''பேசியவர் தமிழர்; பண்டார நாயக்காவின் ஆட்சிலையப் பற்றி பேசியபோது தான் அவ்வாட்சிலையப் பற்றி கூறிய குறைபாடுகள் எல் லாம் சரியானவைதாம் எனும் வகையில் பல பயங்கர உண்மைகளை எடுத்துக் காட்டி தன் வாதத்தை உருதிப் படுத்தி உண்மையாக்கி காட்டினார்'' என்கிறார்.

திரு. ஹோல்லிஸ் மேற்கொண்டு குறிப்பிடுகையில், ''கருப்பர்களுக்கு எதிராக வெள்ளையர்கள் மட்டுமே இந்த மறுமலர்ச்சி பெற்ற உலகத்தில் இனவெறி காட்டி வரு கின்றனர் என்று நினைத்தேன், இப்போது அது பொய்த் துவிட்டது இலங்கையால்!, என்றும் '' திரு. பண்டார நாயக்காவை நான் நன்கு அறிவேன் அவரும் நானும் ஆக்ஸ் போர்டு யூனியனில் அதிகாரிகளாக பணியாற்றி வந்திருந்த நாள் முதலே அவர் பற்றிய அனைத்தும் தெரியும். அவர் இறப்பதற்கு சிறிது காலத்திற்கு முன்பு கூட பார்த்திருக் கிறேன்.

இனவெறி பிடித்தவருள் கடைசியாக ஒருவர் இருக் கின்றார் என்றால் அது டாக்டர் வெர் வேர்ரட் என்பவர் தான் என்றால் அல்ல: எனும் பேசி இருந்துவிட்டார் என்ப தைத் தவிர, எனக்கும் அவரிடம் அன்பு இருந்தது. இன்று அவருடைய கொள்கைகளை இன்னும் சற்று தீவிர மாகவே நடைமுறைக்கு கொண்டு வருவதில் அன்னார் துணைவியார் தன் கணவரின் கொள்கைகளை நிறைவேற்றவே பதவி ஏற்றதாக கருதி வருகிறார் போலும்!'

தொடர்ந்து திருமதி பண்டார நாயக்கா இலன்டன் காமன் வெல்த் மகாநாட்டுக்குச் சென்றுவந்து, இனவெறி பற்றிய தனது கொள்கையையும் மேலோங்கி தமிழர் தம் அறப்போராட்டத்தை நன்கறிந்தும் கூறியது. '' தமிழர் தம் எதிர்ப்பு போரராட்டத்தில் வன்முறை செயல்கள் எதும் தலைகாட்ட விடவில்லை. ஆனால் அதற்கு தரப்பட்ட பரிசு அஞ்சி துஞ்சவேண்டிய நிலை!

போரிடர் வந்துறும் இந்நிலை நீடித்தால் என்று ஒரு

நாட்டுக்கு அதன் போக்கினை அளவிட்டு எடுத்துரைப்பது வீண் ! அந்த பேரிடர் - கேடு ஒரு நாட்டுக்கு - ஆட்சிக்கு வந்துறுமுன், அதைத் தடுக்கவேண்டும். அதுதான் நலம், அவ்வகையில் தான் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் ஆழ்ந்த நல்ல கருத்துக்களை தன் ஆட்சியில் தானே கடைப்பிடித்தல் நலம் நன்மை பயக்கும் அந்நாட்டுக்கும் ஆட்சிக்கும் !

இலங்கை எனும் பொன்னுலகு இன்று ஓர் துன்புலகு

இலண்டன் இதழ் 'கார்டியன்' குறிப்புரை.

---

23 – 11 - 1961 தேதி வெளியான கார்டியன் என்னும் இதழில் முதலிரண்டு கட்டுரைகளில் இலங்கையில் நடக்கும் இனவெறிச் செயல்பற்றி எழுதியுள்ளதில்தான், 'இலங்கை எனும் பொன்னுலக, 'இன்று ஒரு துன்புலகு, என்று குறிப்பிட்டிருந்தது. அந்த இதழின் நிருபர் ஒருவர் கூறியிருக்கிறார், இலங்கையின் அமைதியும் பெருந்தன்மையும் அழிந்து வருகிறது என்று.

மேலும் அக் கட்டுரையாளர் குறிப்பிட்டிருப்பதாவது இந்தியாவைக் காட்டிலும் அதிக மக்கள் தொகை பெருகி வரும் இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகி வருகிறது போட்டியாக இந்நிலையில் பொருளாதாரமோ மந்த நடைபோடுகிறது. 'ஒருவரை அடித்து மற்றொருவர் பிழைக்க என்ற அடிப்படையில் மனம் மாறுகிறது அங்குள்ளவர்க்கு. பணக்காரர்களுக்கு நியாயமான அதிக உரிமை விதித்தும் கூட கட்டுவதில்லை, ஆனால், சாதாரண ஒரு தொழிலாளி மாதம் ரூ. 300 சம்பாதித்தால் வளர்ச்சி வரியாக நூற்றுக்கு நான்கு ரூபாய் வீதம் வரி செலுத்தித்

தீரவேண்டும். வேண்டுமென்றே ஏழைகளை கசக்கிப் பிழியும் மனப்பான்மை வளர்ந்து வருகிறது இலங்கையில் !

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர்கள் அரசியல் சார்ந்த உரிமை இழந்தவர்கள்பற்றி கார்டியன் மேலும் குறிப்பிடும்போது, 'தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் நம்புவதுபோல், அரசாங்கமே குடியுரிமை வழங்க முன் வருவதாகத் தெரியவில்லை. வற்புறுத்தித்தான் தோட்டத் தொழிலாளர் குடியுரிமை பெறவேண்டியிருக்கிறது சிங்களவர்க்காகத்தானே இலங்கை ! என்ற முடிவின் முகப்பிலும், மொழிச் சிக்கல் ஒன்றே இன்று இலங்கையில் தீர்க்கப்படவேண்டிய பெரிய அரசியல் பிரச்னையாக இருப்பது இலங்கை ஒரு தேசமாக மாறிவரும் இந்த நேரத்தில், அங்குள்ள இருதலைக்கொள்ளி எறும்பு நிலையால் துன்பியல்பாட்டாக ஒலிக்கும் நிலைமையைத்தான் எதிர்நோக்கியுள்ளது. பெரும் அளவில் பெருகிவருகின்ற சிங்களவர்கள், உலகமெங்கும் பரவியுள்ள 62 லட்சம் தமிழர்களுன், இலங்கையில் உள்ள 20 இலட்சம் தமிழர்களும் - நாடற்றவர்களாக கருதப்படும் 9 இலட்சம் மக்களும் இருப்பதால் - தமது நன்னம்பிக்கையை இழந்து கவலைகொள்ள நேரிட்டுவிட்டது. அவர்கள் கவலைகொள்ள எந்த நியாயமுமில்லை தமிழர் அங்கு வசித்து வருவதால் உலகமெங்கினும் பல்கிப் பரவியுள்ள 400 இலட்சம் மக்களை மறந்துவிட்டு இருப்பதையும் நினைவிற்கொண்டு பார்க்கவேண்டும் சிங்களவர்கள். தனியுரிமை பெற்றபோதே அந்நாட்டு அரசாங்கம் இனவெறி எனும் புலியின் மீது அமர்ந்துவிட்டதால் அந்த வெறிகுறைய கீழ்வர மறுக்கிறது. அது ஒன்றே அங்கு தமிழர்க்கு ஏற்பட்ட தொல்லைக்கு காரணமாகும்.

இலங்கையில் இராணுவ பீதி

மே 1961ல் இலண்டன் தினத்தந்தியின் குறிப்பு

" இலங்கையிலே இராணுவ நடவடிக்கை பெரும் பீதியை உண்டாக்கிவிட்டது. இனவெறி பிடித்தவர்கள் கிராம மக்களை அடித்துத் துன்புறுத்தியும், சொத்துக்களை சூறையாடினார்கள் என்று தலையங்கம் தீட்டியிருக்கிறது.

மேலும், பகைவர் பிரதேசத்தில் வந்து குவிந்துள்ள பட்டாளத்தின் ஆர்ப்பாட்டத்தின் சூழ்நிலையில் தான், இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதியில் உள்ளவர் இருக்கின்றனர். இந்த செய்தியைக்கூட இந்தியாவிலிருந்துதான் இதழுக்கு அனுப்பப்பட்டது, இலங்கையில் கடுமையான தணிக்கை அமுலில் இருப்பதால் ! இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருபது இலட்சம் மக்களும் முற்றுகையிடப்பட்டுள்ளனர் என்று கூறலாம் ! இராணுவ வீரர்கள் வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தீக்கிரையாக்கினர். மருத்துவ மனையில் இருக்கும் பல தமிழர், கப்பற்படை, காலாட்படை, சிப்பாய்கள் அடித்து நொறுக்கியதாக முறையிட்டனர். சன்னல்களையும் வாயிற் கதவுகளையும் உடைத்தெரிந்தனர், உணவு விடுதிகள் மற்றும் எல்லா வீடுகளின் மீதும் இராணுவ அணி சென்ற வண்டிகளினின்றும் கல் வீசி எறிந்தனர்.

செய்தித்தாள்கள், யாழ்ப்பாண படைத் தளபதி, கெர்னல் உடுகமாவுடன் சந்தித்துப் பேசியதால், அந்த தளபதி முதலில் தனது இராணுவத்தினரை வன்செயலை கைவிடும்படி கேட்டுக்கொண்டார். இதை 1961 மே இரண்டாந் தேதியன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழும் வெளியிட்டது.

தலையுள்ள தலை

பல்வேறு இனம், பல்வேறு மதங்கள் உள்ளடங்கிய ஒரு நாட்டின் அரசியலமைப்பில் மனித அடிப்படை உரிமைகள் பலவற்றையும் உள்ளடக்கிய ஒரு பிரிவு சேர்க்கப் பட்டிருக்கவேண்டும் என்பது உலகம் ஒத்துக்கொண்டதாகும் பெரும்பான்மை எண்ணிக்கை பெற்றுவந்த கட்சிதான் ஆட்சியை நடத்துவது முறையெனினும், அக் கட்சி அல்லது அது அமைத்த ஆட்சி, சிறுபான்மையரை அவமதிக்காது நடத்துவதுதான் நியாயம். அஃதும் மக்களாட்சி

அமைப்பில் நீதியை கடைப்பிடிக்கவும் அல்லது சமநீதிக்கு தனி முதன்மை தந்தும், மனித உரிமைகள் பாதுகாக்கப் படல் வேண்டும். மேலும் அடிப்படை உரிமைகளுக்கும், மதம், இனம் சாதி வகுப்பு எனும் பங்கு பாடின்றி எல் லோருக்கும் வழங்கப்படவேண்டும்.

துரதிருஷ்டவசமாக இலங்கையில் மட்டும் அடிப்படை உரிமைகள் பற்றிய அனைத்தினையும் தேசிய காங்கிரசின் சார்பில் 1944 ல் கூடிய அமைச்சர்கள் அமைப்பு திட் டத்தில், சேர்க்கப்படவில்லை. அந்த முறை கடைப் பிடிக் கப்பட்டிருப்பின், இலங்கை அரசியலமைப்பு ஒன்று தான் மனித அடிப்படை உரிமைகள் - மனித உரிமைகள் பற் றிய பிரிவுகளடங்கிய அரசியலமைப்புகொண்ட நாடுகளில் ஆசியாவிலேயே முதலும் முன் நிற்பதுமாகயிருந் திருக் கும் உரிமைகள் பற்றிய பிரிவை, அரசியலமைப்பில் கடந்த சில பல ஆண்டுகளாக சேர்க்கப்படாத ஒரு பிரச்னையாக இருந்தாலும் கூட இப்போதும் காலம் கெட் டுவிடவில்லை. அந்த குறையை நீக்க, இன்றுள்ள அரசியல மைப்பை உருவாக்கியவர்கள் - உருவாக்க நினைத்து முன் வருபவர்கள் மனித உரிமை அனைத்தையும் வழங்கும் பிரி வுகளை சேர்க்க முடியும். சேர்க்கவேண்டும். ஏனெனில் அது தன்னுட்சி பெற்ற அரசியலமைப்பில் தேவையுள் தேவை, முதல் தேவை !

மனித உரிமைகளும், அதற்கு கானடா நாடு காட்டிய மும் மாதிரியும் !

பிரிட்டிஷ் வல்லரசின் மரபுப்படி அமைந்த அரசியல மைப்புகளில் எல்லாம் இன்று, மனித உரிமைகளையும் அதை வழங்கி நடைமுறையில் கொண்டுவருவதில் படிப் படியாக அதிகரித்து வருகின்றன என்பதை இலங்கையி லுள்ள நாம் தெரிந்துக்கொள்ள விரும்புவது இயல்பே ! தேவையுங்கூட.

நான் சென்ற சில நாடுகள்

என்னில் அன்பும் ஆதரவும் கொண்ட சில நண்பர்கள் நான் பிறநாடு சென்ற காட்சிகளை கதையாக எழுதுமாறு கேட்டார்கள். இவ்வளவு காலமும் சுணக்கி இதை எழுதிவருவது எனென்றால் சிதிமாவோ என்னும் பெண் பிரதமர் இருக்கும் காலத்தில் இக்கதையை எழுதுவதற்கு கொஞ்சம் பயம் இருந்தது ஆனால் தற்சமயம் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு நல்ல மதிப்புள்ள அரசாங்கம் இருக்கும் வேளையில் எழுதுவது சரியென்று நியமித்தபிரகாரம் தற்சமயம் எனது பிறநாடு சென்ற கதைகளை வாசகர்களுக்கு எழுதிவருவதை நல்லாய் உணர்ந்து என்கதைகளைப் படித்தபின்னால் உண்மையில் எனது பிரயாணமும் எனது மெச்சக்கூடிய செய்கைகளும் செய்வதற்கு உதவிபுரிந்தவர் கதிரமலைக் கந்தசுவாமியாரே 1958 ல் நடந்த படுபாதக் கொலைகளையும், பாதகச்செயல்களையும் இறந்த பண்டாரநாயக்காவும் அவரின் மனைவி சிறிமாவோவும், என் கியூ. டயசும், மெத்தானந்தாவும், ராஜரட்னையும், சில புத்தபிக்குகளும், சோமவீர சந்திரசிறீயும் சேர்ந்து பாணந்துறை, களுத்துறை, இரத்மலானை, என்னும் ஏனைய பாகங்களில் வசித்து வந்த தமிழர்களுக்கு செய்துவந்த அநியாயத்தைத்தாங்கொணாது கதிர்காமம் சென்று காதலாகிக் கசிந்துள் உருகி கண்களால் கண்ணீர் வடித்த பின் கதிரமலைக்கந்தர் கொடுத்த வரத்தின் பிரகாரம் இந்தியா சென்று பல தலைவர்களைக்கண்ட பின்னால் திருச்சினுப்பள்ளி கொடைவள்ளல் டாக்டர் மதுரமும், மதுரை மீனாட்சிமில் அதிபர் மதுரை மன்னன் சிறீமான் கருமுத்துத்தியாகராஜன் செட்டியாரும், என்னும் சில நண்பர்களும் எனக்குதவி செய்தபடியால் இலங்கையில் இனவெறி ஆட்சியென்ற புஸ்தகங்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடித்து இந்தியாவிலே இலருக்கு விற்றபின்னால் எனது பேனையையும், கைக்கடிகாரத்தையும் விற்று கப்பல் மார்க்கமாக

மலாய நாட்டிற்குச் சென்றேன். எனது கூடப்பிறந்த தமையனரும். அவரின் மக்களும், மற்றும் இனத்தார் களும் நண்பர்களும் எனது புஸ்தகங்களை விற்று ஆருயி ரம் மலாய் நாட்டு வெள்ளி சேர்த்துக் கொடுத்தபடி யால் லண்டன் சென்றேன்.

சிங்கப்பூர் நகரிலிருந்து 25 ந் திகதி ஒக்டோபர் மா தம் 1962ம் ஆண்டில் விமானமார்க்கமாக லண்டனுக் குச் சென்றேன் 26 ந் திகதி மாலை 8 மணி யளவில் விமானமார்க்கமாக அனேகபிரயாணம் செய்த நான் அன்று தான் பி. ஓ. ஏ. சி. விமானத்தின் மகிப்பையும் உல்லாச பிரயாணத்தையும் கண்டறிந்தேன், உண்மையில் பிரயாணம் செய்தமாதிரி எனக்குத் தோற்றவில்லை.

லண்டனில் இறங்கியதும் என்ஜினியருக்குப்படிக்கும் நடராசா என்ற வாலிபனும் என்னும் ஒருவரும் என்னை அழைத்துச்சென்று ஒரு விடுதியில் தங்குவதற்கு உதவி புரிந்தார்கள். ஒரு நாளைக்கு 25 சிலிங் வீதம் படுக் கைக்கும் காலைச்சாப்பாட்டிற்கும் கொடுத்தேன்.

இந்தக்கதையை எழுதும் பொழுது நன்கு உணர்ந்து பாருங்கள், கொள்ளையடிக்கும் ஒரு இந்தியப்பிரஜையும் ஜெகஜோதி பற்பொடி, வேல் ஊதுபத்தி தயாரிக்கும் நாகலிங்கம் செய்தி என்ற ஒரு பத்திரிக்கையை உண்டாக்கி அவரின் ஆசிரியர் ஒரு மட்டி மடையன் என்னை உலகத்தை ஏமாற்றியவன் என்று எழுதியபடியால் இந்தக்கட்டுரைகளை வாசகர்களுக்கு எழுதி உண்மையைத்தெரிவிக்க வேண்டி யது என்கடமையாகும். இந்த செய்தி ஆசிரியரா இவ ரின் அதிபர் நாகலிங்கமா அல்லது நானு ஏமாற்றியதென் பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள் எனது கட்டுரைகளை வாசித்தபின்னால். தெய்வத்தின் அருளோடு சென்ற நான் பொய்யும் புரட்டும் எழுதாமல் உண்மையை உணரக்கூ டிய பக்குவத்தில் எழுதுவது என்கடமையாகும் நான் பட்டதுன்பங்களையும், கஸ்டங்களையும் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

இலங்கையிலிருந்து 26 ரூபாவுடனும் சென்னைக்கு 3ம் வகுப்பு ரிக்கற் உடனும் லண்டன் செல்கிறேன் என்ற துணிவுடன் 4ந் திகதி ஜனவரிமாதம் 1962 ம் ஆண்டில்

கொழும்புக் கோட்டை புகையிரத மார்க்கமாகசென்னைக்குச் செல்லும் வழியில் மானமதுரையில் இறங்கி ஒரு போஸ் காட் எழுதினேன். மதுரை மன்னன் சிறீமான் கருமுத் துத்தியாகராஜன் செட்டியார் அவர்களுக்கு பணமின்றி நான் சென்னை வருகிறேன் லண்டன் செல்வதற்கு என்று சென்னையிலிருந்து என்னை அவர் கொடைக்கானலுக்கு அழை த்து ரூபா. 500 கொடுத்து டெல்லி சென்று இறந்த பண்டிதர் நேருவுடன் சம்பாஷனை செய்யுமாறு செப் பி னர்.

இறந்த பண்டிதர் நேருவுடன் 28ந் திகதி ஜனவரிமா தம் 1962 ம் ஆண்டு திருவாளர் கண்டேவியாமூலம் நேருவைச்சந்தித்தேன். அவரிடம் இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீதும், இந்தியர்கள் மீதும் செய்துவரும் அநீ யாயத்தை ஒரு மகஜர் மூலம் கையில் கொடுத்தேன். அதை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்புவதாக எனக் குச் சொன்னார் அவருடன் சம்பாசிக்கும் பொழுது இலங் கையில் உள்ளூர் ஆட்சிக்கு விரோதமாக தமிழரசு போஸ்டல் முத்திரைகள் அடித்தது மிகவும் தப்பிதம் என்றார். இந்தியாவில் அந்நியர் ஆட்சியின் கீழ் செய்து வந்த சத்தியாக்கிரகமும், வரிகொடுக்காமல் இருந்ததும் தப்பு என்று ஒருவரால் சொல்ல முடியாது. இலங்கையில் பகிடியிலும், மகிடியிலும் வித்தைகாட்டிய தமிழரசு நிதி திரட்டிய ஏழைமக்களுடைய நகைகளையும் மற்றும் சர்- மான்களையும திரட்டித்திரட்டி தங்களுடைய சொந்தப்பா வணைக்குப்பாவித்ததும் சுதந்திரன் பத்திரிக்கையில் பொய் யும் பிரட்டும் எழுதுவதற்கு உதவி புரிந்தது. ஆனால் 1958 ல் நடந்த பாதகச்செயல்களிலில் பிள்ளைகளை, புருஷர்களை, வீடுகளை, கடைகளை இழந்த மக்கள் கஷ்டப்படும் பொழுது ஏமாற்றித்திரட்டிய பணத்தில் தமிழரசுத்தந்தை என்னும் தலைவர் என்னும் பாதகர் ஒரு பைசா ஆகுதல் கஷ்டப் பட்டவர்களுக்குக் கொடுக்காமல் சுயநலத்தில் செலவழித்து தமிழ்மக்களை திக்கற்ற வாழ்க்கையில் பயந்து ஒதுங்கி வாழவைத்து தமிழ்ப்பாஷையை அழித்து கீங்களப்பாஷைக் கு உதவி புரிந்த தமிழ் அழிவுக்கட்சி என்னும் பெடரல்க் கட்சி சுயநலவாதிகள் வெட்கமும், மானமும் இல்லாமல் தமிழ்மக்களை கஷ்டத்தில் வைத்ததால் படைத்த ஆண் டவன் இந்த ஏழைக்கு இரங்கி இந்தியாவுக்கும் லண்ட னுக்கும் செல்லவைத்தார்.

31 ந் திகதி ஜனவரி மாதம் 1962 ம் ஆண்டில் தமிழ்த் தந்தை என்னும் திரு. செல்வநாயகத்திற்கு சென்னையில் இருந்து ஒரு கடிதம் எழுதினேன். லண்டன் செல்வதற்கும் சென்னையில் இரு புஸ்தகங்கள் அச்சடிப்பதற்கும் உதவி புரியுமாறு மன்றாடிக் கேட்டேன். அதற்கு 4ந் திகதி பெப்ரவரி மாதம் 1962ம் ஆண்டில் செல்வநாயகம் எழுதிய கடிதம் பின்வருமாறு. எனது அருமையான வைத்திலிங்கம் உமது 31ந் திகதி ஜனவரி மாதம் எழுதிய கடிதம் பெற்றுக்கொண்டேன். நீர் செய்யும் வேலைகளுக்கு எங்களுடைய கட்சி இரக்கம் காட்டுவதற்கு இடமில்லை. நீர் செய்யும் பணிகளுக்கும் நாங்கள் பார்த்திப சாலியல்ல எனது கட்சியில் உள்ள பணம் உமக்கோ அல்லது உனது மனிதவிமக்களுக்கோ கொடுத்து உதவமுடியாது என்னால் உமக்கு ஒரு உதவியும் செய்யத்தகுதியில்லை.

வாசகர்களே செல்வநாயகம் போன்ற சமஸ்டித்தலைவர் தந்தை என்று சொல்லுவதற்குத்தகுமா. நீங்களே இதற்கு தீர்ப்பு அழித்தல் வேண்டும்.

எனது பிரயாணக் கட்டுரைகளை நூல்வடிவமாக எழுத எண்ணியிருக்கின்றேன். இலங்கையில் இனவெறி ஆட்சி என்ற நூலில் தொடர்ந்து இக்கட்டுரைகளையும் அச்சடித்து வாசகர்களுக்கு சொற்ப விலையில் கொடுப்பதற்கு எண்ணியிருக்கின்றேன். இதிலே சில முக்கியமான கருத்தை எழுதியிருக்கின்றேன். வாசகர்கள் வாசித்தபின்னால் தங்கள் மனதில் இருக்கும் மதிப்புரையை எழுதி அனுப்புங்கள்.

லண்டனில் முதல்ச் சந்தித்தது லோட் சோல்பரியை

லண்டன் கோல்ட்டன் கிளப்பில் சோல்பரிப்பிரபுவைச் சந்தித்த பொழுது அவர் எனக்கு ஒரு பெரிய உற்சாகத் தைத்தந்தார். நான் எழுதிய இலங்கையில் இன வெறி ஆட்சியென்ற ஆங்கிலப்புஸ்தகத்தை அவரிடம் கொடுத் தேன் அவர் அதிலிரிந்த முகவுரைகளைப்பார்தபின் உட் கார்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்தித்து நின்று கைகொடுத்தார்.

அதன் பின்னல் திரு டங்கன் சாண்டிஸ் அவர்களுக்கு ஓலி பெருக்கியில் சம்பாஇத்து என்னை அவரிடம் போகும் படி சொன்னார். அங்கு சென்று அவரிடம் ஒரு மகஜர் கொடுத்தேன் இலங்கையில் நடந்த பாதகச்செயல்களைப்பற்றி திரு. டங்கன் சாண்டிஸ் என்னை மக்களின் பழைய பிரத மரிடம் என்னை அழைத்துச்சென்றார். பழைய பிரதமருடன் சம்பாசித்தபின்னல் அன்று கொமன்ஸ் சபைகளுக்குச் சென்று இறந்த லேபர் தலைவர் கேட்ச்கள் அவர்களையும் சந்தித்தேன். அதன் பின்னல் டிங்கில் புற் என்பவரையும் தற்சமயம் பிரதமராக இருக்கும் வில்சனையும் சந்தித்தேன் இவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னை ராணிமாளிகைக்கு அழைத்துச்செல்வதாக செப்பிய பிரகாரம் 11 ந் திகதி நவம்பர் மாதம் 1962ம் ஆண்டில் லண்டன் நகரில் இருக் கும் பக்கிங்காம் மாளிகைக்குச்சென்று இலங்கையில் செய் துவரும் அட்டூழியத்தை மகஜர் மூலமாக ஏழுதி எலிசபெத் ராணியிடம் கையில்க்கொடுக்கப்பட்டன. அன்று தினமே ராணி உடனடியாக இலங்கைத் தேசாதிபதி கோபல்லா வுக்கு கவனிக்குமாறு அனுப்பிவைத்தார். 12ந் திகதி டிசெம்பர் மாதம் 1962ம் ஆண்டில் தேசாதிபதி கோபல் லாவ இராணிக்குக் கொடுத்த மகஜர் தனக்குக் கிடைத்

தாகவும் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா டெல்லிக்கும், சீனாவுக்கும் போயிருக்கிறபடியால் வந்தவு டன் அந்த மகஜரைக் சமர்பிக்கிறதாக எனக்குப்பதில் கொடுத்தார். இலங்கைப்பிரதமர் திரும்பியதும் ஜனவரி மாதம் 23ந் திகதி 1963ம் ஆண்டில் எழுதிய கடிதத்தின் பிரகாரம் நான் ராணிக்குக் கொடுத்த மகஜர் தனக்குக் கிடைத்ததாகக் கடிதம் எழுதியிருந்தார் இன்று வரை சிறிமாவோ பண்டாரநாயக்கா நடவடிக்கை எடுக்கவும் இல்லை அதற்கேற்ற மறுமொழிதரவும் இல்லை இது வாச கர்களே உணர்ந்து பாருங்கள். இந்த அம்மையாரின் கணவர் இறந்த திரு. பண்டாரநாயக்கா தமிழர்களுக்குத் தூண்டிவிட்டு பாதகச்செயல்களைச் செய்ததும் காணுமல் 1960ம் ஆண்டில் தமிழரசு இப்பாதகச்செயல்களைச் செய்த கட்சிக்கு ஆதரவு கொடுத்தபடியால் சிறிமாவோ 1960 ல் இருந்து 1964 வரையும் தமிழர்களைக்கேவலநிலையில் வைப் பதற்குத்தூண்டியது தமிழரசுக்கட்சியும், என். எம். பெரே ராக்கட்சியும், பீட்டர் கெனமன் கட்சியும் கடைசியாக எங்கள் நல்லநேரத்திற்கு திரு. சி. பி. டி. சில்வா வும் தொண்டமானும், திரு. பிலிப் குணவர்தனவும் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர்களும். திரு, செல்வநாயகம் கட்சியும் சிறிமாவோவைத் துரத்தி அடித்துக் கலைத்தார்கள்.

லண்டனில் 4 மாதங்க ளாக நான் கஸ்டப்பட்ட

வரலாறுகள்

ஐரோப்பா நாடுகளில் தங்கும் விடுதிகளில் நாள்வீதம் வாடகைகள் கொடுப்பதும் அல்லது மாதவீதம் கொடுப்ப தும் மிகவும் கூடிய வாடகையாகும் குறைந்த பணத்து டன் சென்ற நான் லண்டனில் நடந்த கஷ்டங்களை எழு திலுலும் வாசகர்களுக்கு நன்மை அடையப்போவதில்லை

ஒக்டோபர் மாதம் 26ந் திகதி 1962 ம் ஆண்டில்

லண்டன் நகரை அடைந்த பொழுது என்னிடம் இருந்த பணம் 200 பவுண் மாத்திரமே. அங்கு தங்குவதற்கும் இலங்கை திரும்புவதற்கும் இவ்வளவுதான் என்கையில் இருந்த பணம் இதற்கிடையில் நவம்பர் மாதம் 1960ம் ஆண்டு 50 வருஷங்களுக்கு ஒருக்கால் வரும் குளிரும், வெள்ளமும், பனிக்கட்டியும் தொடங்கியதால் லண்டன் நகரைவிட்டுப்பிரயாணம் செய்ய முடியவில்லை. அதற்கிடையில் ஐக்கியநாட்டுச்சபை என்னை 15 ந் திகதி பெப்ரவரி 1963 ம் ஆண்டில் நியூயோக் என்ற நகருக்கு அழைத்தார்கள் நான்கொடுத்த மகஜரை விளங்குவதற்கு திரு. சிவசித்தம்பரம் உடுப்பிட்டி எம், பிக்கும் லண்டன் வருமாறு எழுதியிருந்தேன் ஐக்கிய நாட்டுச்சபைக்குப் போவதற்கு இவருடைய மறுமொழியும் எனக்குக்கிடைக்கவில்லை. இவருக்கு எனக்கு இருந்த துணிவு இருக்கவில்லை பிறநாடு செல்வதற்கு பத்திரிகைகள் இலங்கையிலும், லண்டனிலும் நான் ஐக்கிய நாடு சபைக்குச் செல்வதற்கு பிரபலியப்படுத்தியபடியால் இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தது என்னை அமெரிக்கா செல்வதற்கு விசாகொடுக்கவேண்டாமென்று லண்டனில் இருக்கும் அமெரிக்க அதிபருக்கு எழுதியபடியால் ஐக்கிய நாடு சபைக்குப் போகமுடியவில்லை.

லண்டனில் இருந்து கப்பல் மார்க்கமாக திரும்பி இலங்கை வருவதற்கு எண்ணினேன். ஆனால் கப்பல்க்கம்பெனிகள் கொழும்பு நகருக்கு செல்லமாட்டோம் என்று சொல்லி கப்பல்ப்பிரயாணச்சீட்டு கொழும்புக்கு கொடுக்கமுடியாது என்று சொன்னார்கள். அதன் பின்னால் லண்டன் நகரிலிருந்து பேரூட்வரை ரெயில்மார்க்கமாக பிரயாணம் செய்தேன் குளிர் ஒரு பக்கம், ஐஸ்படர்ந்திருந்தது ஒருபக்கம் 10 நாட்களாக ரெயிலுக்குள் இருந்து கஷ்டங்களும், துன்பங்களும் வாசகர்களுக்கு எழுதுவது சுலபமல்ல, ஆனால் பின் எழுதிவருவேன்.

பிரதான ஒரு நாட்டிற்கு செல்வாக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஊணும், உடையும் மிகவும் இன்றியமையாதது. ஒரு நாடு தனக்குத்தேவையான உணவையும், உடையையும் உண்டாக்குமானால் அந்த நாடு செல்வம் கொழிந்த நாடாக இருக்கும் வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசு பணத்தைச்சேர்த்து தங்களது கட்சிக்கும் சுயநலத்திற்கும் பாவித்தார்களே ஒழிய தமிழ்ப்பகுதிகளில்

பொருளாதாரமுன்னேற்றத்திற்கும், கமத்தொழில் விருத்திக்கும் ஒருவிதமான உதவிபுரியவில்லை.

லண்டனில் போட்மோட்டார்க்கம்பெனியைக் கண்டேன், அங்கு 5 மோட்டார்க்கார் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்கிறார்கள். எகிப்தில் ஒரு நாளைக்கு 100 டன் சீனி உற்பத்திசெய்கிறார்கள். துணிச்சாலையில் ஒரு நாளைக்குத்தேவையான ஆடைகள் நேய்கிறார்கள் இப்படிக்காட்சிகளைப் பார்த்த நான் இந்தியாவை விவரித்து எண்ணும் பொழுது கோயம் புத்தூரில் 85 துணிச்சாலைகள் இருக்கின்றன அதே மாதிரி கேரளத்திலும் அனேக தொழிற்சாலைகள் மிகவும் துரிதமாக ஜெர்மன் நாடுகள் மாதிரி உற்பத்தி அதிகம். மதுரையில் மதுரை மன்னன் சிறீமான் கருமுத்துத்தியாகராஜன் செட்டியார் அவர்களின் நெசவு நிலையம் மிகவும் திறமையாக நடைப்பெற்று வருகிறது இன்னும் அனேக நெசவு நிலையங்கள் இருக்கிலும் மீனாட்சியில் திறமையாக நடைப்பெற்று வருகின்றது, இதே மில் அதிபர் மதுரை மன்னனும் அவரின் புதல்வர்கள் திருநாவுக்கரசும், திரு. சுந்தரமும் மதுரையில் கண் கண்ட தெய்வம் போல் தொழிற்சாலைகளையும், தியாகராஜன் கல்லூரிகளையும் குற்றம் குறை இல்லாமல் கவனித்துவருவதை கவனம் செலுத்திவந்தேன். பிதாவும் இரு மக்களும் தொழிலிலும், பாடசாலைகளிலும் மட்டும்மல்ல தமிழர் பண்பிலும், கலையிலும் அவர்களின் தமிழ்ப்பாஷையிலும் பெரிய கவனம் செலுத்திவருகின்றார்கள். பாண்டிய அரசின் ஆட்சியின் கீழ் மதுரைநகரில் தமிழ்ப்பாஷைக்கும் கலாச்சாரத்திற்கும் எவ்வளவு மதிப்புக்கொடுத்தாரோ அதிலும் பார்க்க இக்காலத்தில் மதுரை மன்னன் சிறீமான் கருமுத்துத்தியகராஜன் செட்டியாரின் தமிழில் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் எண்ணும் பொழுது இவரின் தமிழ் அறிவையும், ஆற்றலையும் உடையதினால் இந்தியா அரசாங்கம் தமிழைப் புறக்கணித்தபொழுது பொதுஜனங்களுக்கு ஆர்வத்தை ஊட்டினார். பணம் கொடுத்து உதவி புரிந்தார் இப்படியான தமிழ்ப்பற்றுக் கொண்டவரின் உருவச்சிலையை தென்நாட்டிலும், இலங்கையிலும் சென்னை நகரில் உயிருடன் இருக்கும் தமிழ்ப்பற்றற்ற காமராஜரின் உருவச்சிலையை திறப்புவிழாவில் இறந்த பண்டிதர் தேரு திறக்கும் பொழுது இன்றுதான் உயிருடன் ஒரு மனிதனின் உருவச்சிலையைத்திறக்கின்றேன் என்று இழிவாகப்

பேயெதின் பின்னால் சிறீமான் கருமுத்துத்தியாகராஜன் செட்டியாரின் உருவச்சிலை கூட்டாமல் அவரின் பெயராள் இலங்கையில் வடமாகாணத்தில் ஒரு திறமையான நெச வுசாலையை உண்டாக்குவதற்கு உதவி செய்வதாகச்சொல் லியிருக்கிறார்.

வடக்கிலும் கிழக்கிலும் நிலவளம் பொருந்திய மாகா ணங்களில் இதுவரையும் மக்களின் அங்கத்தவராக நிய மித்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் தொழிற்துறைகளில் இறங்காது காலம் கழித்தது நம் நாட்டுக்கு இழுக்காகும் இன்னும் காலத்தை வீணுக்காமல் நம் சூழ்நிலைக்கேற்ப கைத்தொழிற்சாலைகளையும், விவசாயத்தையும் விருத்தி பண்ண முன்வரவேண்டும்.

இத்தகைய தேசிய அரசாங்கம் இருக்கும் பொழுது அந்நியநாடுகளின். உதவியைப்பெற்று நம் நாட்டுப்பாரா ளுமன்ற அங்கத்தவர்கள் தமிழ்க் காங்கிரஸ் என்றும், தமிழரசு என்றும் பிரிவினை காட்டாதபடி துவேஷத்தை உண்டாக்கி தமிழ் மக்களை இன்னும் ஒருமுறை கேவலநி லையில் வைப்பதற்கு எண்ணுவது மிகவும் ஒரு பெரிய துக்கத்தைக்கொடுக்கின்றன. இதற்கு உதாரணமாக தேசிய அரசாங்கத்தின் இரு அமைச்சர்கள் யாழ்ப்பாணம் சென்ற பொழுது தமிழரசு அங்கத்தவர்கள் கச்சேரிக்கூட்டத்தில் ஏன் பங்குபற்றினர்கள். இவர்களுடைய எண்ணங்களைப் பார்த்தால் இழுக்கான எண்ணமும். படிப்பற்ற சீர்திருத் தமில்லாமல் இருக்கும் சக்கிலிச்சனங்கள்போல் இருக்கின் றன. இன்னும் தமிழ் மக்களின் தலைவர்கள் ஒற்றுமையா கி தங்கள் நாட்டில் இருக்கும் குறைகளைச்செய்வதற்கு தமிழரசுப்பாராளுமன்ற அங்கத்தவர்கள் எண்ணுமல், இன்னும் துவேஷங்களை உண்டாக்கி மனிதர்களை மாடாக் கப்பார்க்கின்றார்கள். வாசகர்களே இதை நன்கு உணர்ந் துபாருங்கள்.

கொழும்பு நகரில் இருக்கும் சுவாமி விவேகானந்த சபையில் தமிழரசும் கொமுயூனிஸ்காரரும் புகுந்தபடியால் இரம்பக் கேவலநிலையில் கொழும்பு டிஸ்ரிக்கோட்டில் வழக்கு நடக்கின்றன. முன்பாக இருந்த காரியதரிசி சபைக்குடைய பல ஆயிரம் ரூபா பெறுமதியான புஸ் தகங்களை விற்று மோசடி செய்திட்டார்கள்

எலிசபெத் அரசிக்கு ஆசிரியர் கொடுத்த விண்ணப்பம்

தமிழர்களின் துயரை உடனடியாக நீக்குமாறுவலியுறுத்தல் உன்நாட்டுச்சிக்கல் அல்ல என்று விளக்கம்.

தமிழர்களைக்கொடுமைப்படுத்துவதை நிறுத்தும்படி இலங்கைத் தலமை அமைச்சர் திருமதி பண்டாரநாயக்காவை பிரிட்டிஷ் அரசி வற்புறுத்தவேண்டும்மென்று கூறியுள்ளேன்.

அரசி எலிசபெத்திற்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியுள்ளேன் இதன் பிரதிகள் ஐ. நா. பொதுச் செயலாளர், அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பிரிட்டன் தலைமை அமைச்சர் இலங்கையில் கவர்னர் ஜெனரல் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

"பலசந்ததிகளாக எங்கள் குடும்பத்தினர் இலங்கையில் இருந்து வருகின்றனர் ஆகவே அந்தநாட்டில் தமிழர்களை இலங்கை அரசு நடத்திவரும் முறைபற்றியவிபரங்களை என்னால் நன்கு விளக்கமுடியும்.

சிங்கள மொழியுடன் தமிழையும் ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று வலியுறுத்தி இலங்கைத் தமிழர்கள் நடாத்திவரும் அறப்போரை ஒழிக்க இலங்கை அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழர்களை அழிக்கவும், அவமானப்படுத்தவும், கற்பழிக்கவும், சுட்டுக்கொல்லவும், கொள்ளையடிக்கவும். கொடுமைப்படுத்தவும் இலங்கை அரசு துணிந்துள்ளது இலங்கை வளம் பெற்ற நாடாவதற்குப் பாடுபட்ட பல லட்சக் கணக்கான தமிழர்களின் நிலை இப்பொழுது மிகவும் கேவலமாக இருக்கிறது.

99 சதவீதம் தமிழர்கள் உள்ள பகுதிகளிலும் ஒரே நாளில் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று இலங்கை அரசு முடிவு செய்து அடக்கு முறையைக்கையாண்டுவருகிறது தமிழர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் விலங்குகளைப் போல் நடத்தப்படுகின்றனர்.

இலங்கை அரசின் நடவடிக்கைகள் இன ஒதுக்கல் கொள்கையை நிறைவேற்ற முயலும் தென் ஆப்பிரிக்க அரசின் நடவடிக்கைகளை விட மோசமாக இருக்கிறது. ஆகையால் உங்கள் குடிமக்களாகிய எங்களைக் காப்பது உங்கள் கடமையாகும். நீங்கள் உடனடியாகத்தகுந்த நடவடிக்கை எடுக்காவிடில் இலங்கையும் மற்றொரு கொங்கோ அல்லது லாவோசு போலாகி விடும் அரசு அளவில் இச்சிக்கலைத்தீர்க்க நீங்கள் முயலவேண்டும் தேவைப்பட்டால் ஐக்கிய நாடுகள் சபையிலும் இச்சிக்கலை எழுப்பிச்சட்டத்திற்குட்பட்டு அறப்போரில் ஈடுபட்டுள்ள தமிழர்களைக்காக்கவேண்டும்.

இது குறித்து இந்தியத்தலைமை அமைச்சர் நேருவுக்கும் சென்னை முதலமைச்சர் மூலம் ஒரு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் சிக்கல் உள்நாட்டுச்சிக்கல் அல்ல அது உலகச்சிக்கலாகும்.

இலங்கை வாழ்தமிழர் வழி, வழிவுடமை பெற்றவர் அதேபோன்று மரபுரிமை பெற்றிருப்பதை மறக்கமுடியாது 1800 ஆண்டுகளுக்கு முன்னமே இலங்கையில் தமிழ் மொழி பரவி மல்கி இருந்ததும் உலகம் அறியும் மேலும் உலகின் கண் உள்ள பல்வேறு விழிப்புணர்ச்சியும் தெளிவும் பெற்றநாடுகள் அறியும். இலங்கையில் தமிழர் ஆற்றிய பணியும் அதன் பயனையும் இந்நிலையில் பொருளாதார சமுதாய அரசியல் மாறுபாடு, வேறுபாடு காரணமாக வளரும் எளிமையும் பொருந்திய மனித சமுதாயத்திற்குத் தேவையான அறிவையும், அறிவினால் விளையும் கலைகள் பலவற்றையும் தந்துதவும் தமிழை துணிவோடு ஒதுக்கித்தள்ளிவிடமுடியாது. ஒதுக்கித்தள்ள அழித்துவிட சம்மதிக்கவும் முடியாது.

இதற்கு எடுத்துக்காட்டாக பயன்பெறத்தக்க ஒரு மேற்கோள் காட்டவிரும்புகின்றேன் ஆழ்ந்த மற்றவரால் வெல்லமுடியாத நாட்டுப்பற்றினை மக்களுக்கு ஊட்டிய கவிஞர் பைரனின் கிரேக்க தீவு என்ற கவிதையின் சில வரிகள்:-

" நாம் எழுத்து அறிவு பெற்றது எதற்காக ?
அடிமைவாழ்வில் உழன்று கிடப்பதற்காகவா ?

இத்தகைய பொன்னுரையை நினைவிற் கொண்டு பார்க்கும் பொழுது ஒரு நாட்டின் சுதந்திரம் அந்தநாட்டின் மொழியின் சுதந்திரத்தைப் பெற்றது புலனுகிறது அடிப்படையில் நோக்கும் போது அந்தக் குத்துரையின் கோணத்தில் நின்று ஆயும்போது இலங்கையில் தமிழ்மொழியும் ஆட்சிமொழியாக இருக்கத்தடையேதும் இல்லை தகுதி பெற்றது சுதந்திரமாகத்தனித்து சிறப்புடன் விளங்கும் வலிமை உரிமை பெற்றது என்பது பளிங்குத்தோற்றம்

இன அடிப்படையில் அல்லது மொழி அடிப்படையில் தான் ஒரு மொழியை ஆட்சி மொழியாக்கமுடியும் பெரும்பாலும் தமிழிலேயே பேசப்பட்டு ஆட்சி நடத்தி வந்ததாலும் இன அடிப்படையிலும் எடுத்துக்கொண்டாலும் தமிழினத்தின் கலை பண்பாடு முதலியவற்றில் சிங்கள மொழியும் கலையும் வளம்பெற்று இருக்கிறது 1800 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் என்ற தரப்பில் இறந்த வி. கனகசபை அவர்களால் எழுதபட்ட நூலில் தமிழ் மொழி இலக்கியம் தமிழர் பற்றிய பலதையும் தெரிந்து கொள்ள வாய்ப்புப்பெற்றோரும் அந்த நூல் தமிழ் மொழி இலக்கியகளஞ்சியம் எனக் கூறலாம் சான்று பலகாட்டி பண்டைத்தமிழகத்தில் வாழ்ந்த குடிமக்கள் வில்லவர் மீனவர் என்று உறுதியிட்டுக்கூறுகிறார் ஆசிரியர்:

ராணிக்குக் கொடுக்கப்பட்ட மகஜரின் மேலே சொல்லப்பட்ட காரணங்களைக்காட்டி தமிழர்கள் இலங்கையில் முன்பாக வாழ்ந்ததென்ற சரித்திரத்தை சுட்டிக்காட்டினேன் சோல்பரிப்பிரபுவின் 29 ம் சட்டத்தை மறுத்து மறைத்து இனவெறுப்பை உண்டாக்கி இறந்த பண்டார நாயக்காவும் அவரின் மனைவி சிறிமாவோவும் தமிழ் இனத்தை ஒடுக்கி ஆளப்பார்க்கின்றனர் ஏனெனில் தமிழினத்திற்கு தலைசிறந்த தலைவர் இல்லாதபடியால் செல்வநாயகமும்

அவரின் கட்சியும் வாழவேண்டுமென்றும், பொன்னம்பல மும் அவரின் கட்சியும் வாழ வேண்டுமென்றும் ஆனால் இந்த இருவர்களின் மனதில் தமிழர்கள் நன்கு வாழவேண்டுமென்ற ஆசை இல்லை அப்படி இருந்தால் ஏன் இவர்கள் பிரிந்திருந்து ஒருவர் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் இருந்தால் போதும் என்கிறார். மற்றவர் முழு இலங்கையிலும் தமிழினம் வாழவேண்டும் தமிழ் முழு இலங்கையிலும் பாவித்தல் வேண்டுமென்று சொல்லுகிறார் இதை வாசிக்கும் வாசகர்கள் தமிழினத்திற்கு இரண்டில் எது வேண்டுமென்பதை எழுதி அனுப்புமாறு மன்றுடிக்கேட்கின்றேன்.

இலங்கைத் தமிழர் தூதுக் குழுவுக்கு

திருவாளர் இராஜகோபாலச்சாரி யோசனை கூறும் பொழுது இலங்கையில் கூட்டமைப்பு அரசு ஏற்றது என்று சொன்னார்

அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், தலைசிறந்த சென்னைத்தமிழ்த்தலைவர் திரு சி. இராசகோபாலச்சாரியார் இலங்கைத் தமிழர் குழு 1962ம் ஆண்டு சென்னையில் அவரைச்சந்தித்த பொழுது அவர் கூறியதாவது (இலங்கைத்தமிழர் மீது அனைத்தும் இலங்கைக் கூட்டமைப்பில் தமிழ் பேசப்படும் பகுதி தொகுதியாக அங்கிகரிக்கப்படவேண்டும்) இலங்கைத் தமிழர் மீது நான் மிகவும் அனுதாபம் கொண்டுள்ளேன். அவர்கள் இலங்கைத் தீவில் பண்டைக்காலத்திலிருந்தே வசித்துவருபவராவர் இலங்கை இன்று உள்ள நிலையை அடைவதற்குத் தமிழர் பெரும்பாடுபட்டனர் அவர்கள் நன்கு வரையறுக்கப்பட்டபகுதியில் வசிக்கின்றனர், இலங்கையின் நிர்வாகத்திற்குத் தீங்கு ஏற்படாத முறையில் அப்பகுதிக்குச்சுய ஆட்சி வழங்கவேண்டுமென்று அவர்கள் கேட்கின்றனர். இது ஒரு நியாயமான கோரிக்கையாகும்,

டில்லியில் ஆட்சிநடத்தும் காங்கிரஸ் அரசாங்கத்தினர் இலங்கைத் தமிழர்களுக்கு நீவிர நண்பர்களாக இல்லாததுபற்றி வருந்துகிறேன், அரசாங்கங்கள் அரசாங்கங்களுடன் சேருவதும் கிளர்ச்சியாளர்களையும் புறக்கணிப்பதும் இயற்கையே தமிழர் கோரிக்கைக்கு வடஇந்தியாவை விட தென் இந்தியாவில் அதிக அனுதாபம் இருக்கிறது ஐ. நா வில் இலங்கைத்தமிழரின் கோரிக்கைக்கு அதிக ஆதரவு கிடைக்குமா என்பது ஐயமே, ஆனால் திரு செ. வைத்திலிங்கம் அவர்கள் ஐ. நா வில் இருக்கும் அதிகாரிகளுக்கு எழுதியிருக்கும் கடிதங்களைப் பார்த்த அளவில்

ஐ, நா வின் காரியதரிசியின் பதிலைப்பார்த்த அளவில் அவரின் முயற்சிக்கு உதவி கிடைக்கும் என்று நம்புகிறேன் இலங்கைத்தமிழர் சிக்கலை முதலில் பிரிட்டிஷ் கொமன்வெல்த் சபைக்கும், இங்கிலாந்து இராணிக்கும் எடுத்துச் செல்வதற்கு திரு வைத்திலிங்கம் உற்சாகத்தை நான் மெச்சுகிறேன், இலங்கைத் தமிழர்களின் நிலையைப்பற்றி உண்மைகளை திரு வைத்திலிங்கம் இந்தியாவில் பலபாகங்களிலும்' ஐக்கிய நாட்டுச் சபையிலும், இங்கிலாந்து மகாராணியாருக்கும் அனுப்பிய மகஜர்களைப்படித்துத் திகைத்தேன் உண்மையில் திரு வைத்திலிங்கம் எழுதிய இலங்கையில் இன வெறி ஆட்சியென்ற தலைப்பில் தமிழிலும் ஆங்கிழத்திலும் படிக்கப்படிக்க ஆர்வமும், உணர்ச்சியும் பெற்றேன். இலங்கைத்தமிழர்கள் மீது துயர் அடைந்துள்ள இந்தநேரத்தில் இவர் இந்தியாவந்து இவ்வளவு ஊக்கத்துடன் இலங்கைத்தமிழர் மீது காட்டிய ஆர்வத்தை அவர் வகைப்படுத்தித்தொகுத்துத்தந்துள்ள ஒவ்வொரு வரியைப்படிக்கும் போதும் இலங்கையில் உள்ள சிக்கல் வீரை அல்லது தீர்க்க வேண்டிய இடபாடும், தொலை, நிலை நமக்குப்பளிங்கு போல் கண்முன் தோன்றுகிறது. அவ்வாறு தோன்றுகின்ற பிரச்சினைகள் ஒற்றுமைஇல்லாததடியாலே இலங்கைத்தமிழர் பிரச்சினையில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும் வகையில் இரு நூல்களையும் தொகுத்து எழுதி வெளியிட்டுள்ள திரு வைத்திலிங்கம் அவர்கள் பாராட்டுக்கும் மதிப்புக்கும் உரியவராகிறார்.

இலங்கைத்தமிழர் மீது மிகவும் ஆசைகொண்டுள்ள திருவாளர் ஏ. எஸ். சாமி அவர்கள் (சட்டவல்லுனர்) ஆசிரியருக்கு சென்னையில் இருக்கும் பொழுது கொடுத்த

உதவிகளை மறக்கவே முடியாது. அவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பாலும் ஒவலும் குடித்த நான் திருவாளர் சாமியை மறக்கமுடியாமல் இருக்கின்றேன் வர்சகர்களே உண்மையில் இவரின் கொள்கைகள் திருவாளர் சுந்தரலிங்கம் போன்ற தெஞ்சுடையார், ஆசிரியர் மலாய் நாட்டுக்கு போகும் பொழுது கப்பலில் ஏற்றிய பின் அழுது ஆர்வத்தைக் கொடுத்துச்சென்ருர் ஆசிரியரின் தமையனூர் டாக்டர் செ. வீரசிங்கம் அவர்கள் ஆசிரியர் லண்டன் செல்லும் பொழுது விமான நிலையத்தில் அவரும்; அவரின் மனைவியும் பிள்ளைகளும் வெம்பி வெம்பி அழுதார்கள். அதேபோல் நண்பர் சாமி அவர்களும் அழுது வழியனுப்பினூர் திருவாளர் சாமி அவர்கள் தலைசிறந்த வக்கீல், ஆனல் அரசாங்கத்துடன் எப்பொழுதும் பகைத்துக்கொண்டே இருப்பார், ராஜாஜியின் பெரிய நண்பராவார்.

தமிழிசை

உலகத்தில் தோன்றிய முதல் இனம் தமிழினம், முதல் மொழி தமிழ் மொழி, முதல் நாகரீகம், தமிழ் நாகரீகம் முதல் இசை தமிழ் இசை இதற்கு உலக முழுவதும் அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும், வரலாற்று அடிப்படையில் உள்ளன. ஓர் இனம் என்ருல் அதற்கென ஒரு மொழி இருத்தல் வேண்டும். அம் மொழியில் இலக்கியம் இலக்கணம் முதலியன இருத்தல் வேண்டும் அம் மொழியைப் பேசும் இனத்திற்கெனத்தனிப்பட்ட சிறப்பான பண்பாடு நாகரீகம், மதம் முதலியன இருத்தல் வேண்டும் இவை அத்தியாவசியமானவை இவை தவிர அவர்களுக்கு இசை நாட்டியம், நாடகம், சிற்பம் ஓவியம் போன்ற நுண் கலைகளும் இருத்தல் அவசியம் இத்தகைய கலைகள் இருந்தால்த்தான் வாழ்க்கை மக்களுக்கு இன்பமயமானதாய் இருக்கும் இல்லாவிட்டால் நாளடைவில் மக்களுக்கு வாழ்க்கையில் சலிப் பேற்பட்டு விடும்.

மொழிதோன்றுவதற்கு முன்பே இசை தோன்றிய தென ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றர்கள் நாமும் உய்த்துணர்ந்துபார்த்தால் இஃது உண்மையென உணரலாம்

இறைவன் என்று தோன்றினுலே அன்று தோன்றியது இசை. இறைவனே இசைவடிவமானவன். இதனால் தான் இறைவனே நாதப்பிரம்மம் என முன்னோர்கள் போற்றிவந் துள்ளனர் தில்லை நடராசப் பெருமானின் கரத்தில் உடுக் கையும் சரஸ்வதியின் கரத்தில் வீணையும், கண்ணனது கரத் தில் வேய்ங்குழலும், நாரதர் கரத்தில் தம்பூராவும் இருப் பதினுலேயே இசையின் பெருமை எத்தகையது என்பதை நாம் அறியலாம். இராவணன் சாமகீதம் பாடியவுடன் இறைவனது உள்ளம் உருகிற்று. அகத்திய முனிவர் இசை பாடியவுடன் பொதிய மலைக் கருங்கல் உருகிற்றும் சம்பந்தர் இசைபாடினுர், உமாதேவியார் ஞானப்பாலை சுரந்து ஊட்டினுர். ஆகவே ஆறறிவுடைய மனிதன் தொ டக்கம், ஓர் அறிவு உயிர்கள் வரை யாவும் இசையில் கட்டுப்பட்டனவே ஆகும்.

தமிழ்மக்கள் தமிழ் மொழியை இயல், இசை, நாட கம், என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் இதிலிருந்தே பண்டைத்தமிழர்கள் இசைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். தமிழ் நாட்டில் இசைச்சங்கமொன் று பண்டைக்காலத்தில் இருந்தது என்றும் அதில் பலபுல வர்கள் இருந்து இசைப்பயிர்ச்சியும். ஆராய்ச்சியும் செய்து வந்தார்கள் என்றும் இசையைப்பற்றிய பல் வேறு நூல் களை இயற்றி உள்ளார்கள் என்றும் பரிபாடல், சிலப்பதி காரம், போன்ற பழைய நூல்கள் நமக்குத் தெரிவிக்கின் றன இத்தகைய தமிழ் இசை நூல்களாவன இசைநு ணுக்கம், இந்திரகாளியம், பஞ்சபரதியம், பஞ்சமரபு பெருங்குறுகு, பெரு நாரை முதலியன வாகும் ஆனல் இந்நூல்கள் எல்லாம் இப்பொழுது மறைந்து விட்டன இன்று நமக்குத் தமிழிசையைப்பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கும் நூலாக சிலப்பதிகாரம் ஒன்றுதான் உள்ளது மேலும் கல்லாடம் என்னும் தமிழ் நூலில் யாழ்களைப்பற் றிய செய்திகளையும் அவற்றின் இலக்கியங்களையும் அறிய லாம்.

1958ல் இலங்கையில் நிகழ்ந்ததென்ன ?

முற்பகல் செயதால் பிற்பகல் விளையும்

கி பி. 1956லிருந்து 1962 வரை தேசிய—நாட்டு ஒற்றுமை என்பது நகர்த்தெரியப்பட்டது மட்டுமின்றி, இனமதம் என்ற முறையில் கடைப்பிடிக்கப்பட்ட சகிப்புத்தன்மையை இலங்கையில் ஏற்பட்ட சூழ்நிலைக்கு எவ்வளவு தியாகம் செய்ய முடியுமோ அவ்வளவு செய்தாயிற்று. இருந்தும் 1958-ம் ஆண்டு மே திங்களில் 22-ந் தேதியன்று, 500 காலிகளும்—கயவர்களும் தந்தி கம்பிகளை அறுத்தெறிந்த பின்னர் (பொலன்னருவாவில்) மட்டக்களப்பில், ரெயில்வண்டியை நாசமாக்கிவிட்டிருக்கின்றனர். சன்னல்களை உடைத்தும் சேதப்படுத்தினர். வெலிகண்டே நிலையத்தில்தான் வண்டியில் பயணம் செய்வோர் எல்லாம் இறங்கிவிட்டனர். (பொலனருவாவிற்கு) அருகில் உள்ள ரெயில் நிலையம் வெலிகண்டே என்பது குறிப்பிடத்தக்கது.) அப்போதுதான் செய்தி வந்தது, 500 காலிகள் வண்டியை உடைத்து பயணம் செய்வோருக்கு தொல்லை விளைத்திருப்பதாக மே 25-ந் தேதியன்று, கரும்புத் தோட்டத் தொழிலாளரை கத்தியால் குத்தியும், கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு குவித்திருக்கின்றனர்—இரக்கமின்றி! ஆனால் பண்டாரநாயக்கா இதைப்பற்றி கவலைகொள்ளவுமில்லை; கவலைகொண்டு அவசரச் சட்டமும் கொண்டுவர வில்லை—ஏன்? சி. பி. டி. சில்வா அனுமதிக்க வில்லை! இதன் மூலம் தமிழர்கள் துன்பப்பட்டு அழித்தொழியட்டுமே, பொலன்னருவா, திரிகோணமலை போன்ற இடங்களிலெல்லாம், என்பதுதான். 1958 மே, 25-ம் தேதியன்று, ஹிங்குரங்கொட என்ற பகுதியில் உள்ள அரசினர் பண்ணையில் தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர், ஆயிரம் காலிகள் மிகப் பயங்கரமான ஆயுதங்களைக்கொண்டு தாக்கியதால்! ஒரு மாது இவ் வெங் கொடுமையால் குழந்தைகளுடன் அருகில் இருந்த கிணற்றில் குதித்து உயிர்விட்டாள் மேலும் 8 மாதம் சூழற்று இருந்த ஒரு தமிழ் மாதின் வயிற்றைக் கிழித்து இரத்தம் வெள்ளத்தில் மிதக்கச்செய்து

தன்மீது கவனத்தை செலுத்தும்போது, இன்றுள்ள நெருக்கடியும்--நிலைமையும், எதிர்காலத்திலும், பல ஆபத்துக்குக்களை எதிர்நோக்கித் தீர வேண்டியநிலை உருவாகி வருகிறது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை"

"மொழிப் பிரச்னை குறித்து மேலும் குறிப்பிடுகையில், கானடா சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில், இரண்டு மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பதைச் சுட்டிக் காட்டி, அவ்வாறு தமிழையும் ஆட்சி மொழியாக்குவதே, உலகப் பேரவை சட்டப் பிரிவில் குறிப்பிட்டப்படி அமைதிக்கும் நல்லுறவுக்கும் வழிவகுத்து நாட்டின் தரத்தை-நல்ல நிலைமையை உயர்த்த முடியும்: அதற்கு இலங்கை அரசு முன் வருதல் உடனடியாக தேவை" என்று வலியுறுத்துகிறது.

இந்தக் கருத்து, மனிதர்தம் அடிப்படை உரிமைகளையும் - பிறிதுரிமைகளையும் மதித்து - உயர்த்துவதோடு, மதம், மொழி, இனம் பால் என்ற வேறுபாடு இன்றி யிருப்பதையும் எடுத்துக் காட்டுகிறது. இதன் அடிப்படையில், உலகப் பேரவையில் (ஐ நா. சபை) இலங்கையும் ஒரு உறுப்பினர் நாடு என்ற காரணத்தாலேனும் மேற்குறித்துள்ளப்படி நடந்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிற்து. ஜெனிவாவில் தலைமை அலுவலகத்தை அமைத்துக் கொண்டு இயங்கிவரும் சர்வதேச சட்ட வல்லுநர் குழு உலகப்பேரவையின் சமுதாய பொருளாதார அவையுடன் தொடர்புகொண்டு அல்லது ஆய்ந்துரைக்கும் குழுவாக பணியாற்றி வருவதென்பது நினைவிற்கொள்ளத்தக்கது. அதற்கு சட்டவல்லுநர் குழு ஒரு நாட்டு சட்டவல்லுநர்களை மட்டுமே உள்ளடக்கியதன்று, 23 நாடுகளினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட புகழ்பெற்ற 25 சட்டவல்லுநர்களைக்கொண்டு இயங்கி வருவதாகும். அதன்அறிவுரைப்படியேனும் இலங்கை அரசு நடந்து காட்ட முன் வருமா?

தி.மு. கழகத்தை எதிர்த்து பண்டித நேருவுக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம்

இலங்கை ஆட்சியின் மொழிக்கொள்கை குறித்தும் அதன் அட்டூழியங்களைப்பற்றியும், 1961 மே 9-ந் தேதியன்று தி. மு. கழகம் தனது ஆதரவை இலங்கை வாழ் தமிழர்களுக்கு காட்டவும், இலங்கை அரசின் ஒரவஞ்சனையை-போக்கினைக் கண்டித்தும் சென்னையில் நடத்திய மாபெரும் ஊர்வலமும், இலங்கைத்துணை ஹை கமிஷனர் அலுவலகத்தின் முன் எதிர்ப்பை தெரிவித்தது குறித்தும், பண்டித நேருவுக்கு இலங்கை அரசாங்கம் ஒரு கண்டனத்தை அனுப்பியது. இலங்கை முதலமைச்சர் நேருவுக்கு ஒரு அஞ்சல் அனுப்பினர், தி. மு. கழகத்தின் எதிர்ப்பு நடவடிக்கைபற்றி. அதுபோது இலங்கை ஹை கமிஷனர் டில்லியில் இருந்தார். அவர், காமன்வெல்த் காரியதரிசிக்கும் அறிவித்திருக்கிறார்

அது குறித்து, இந்திய பேரரசு தன்னுடைய நிலையை இலங்கை அரசுக்கு தெளிவுப்படுத்திவிட்டது. அதாவது, "தி. மு. கழகம் காங்கிரசுக்கு எதிராக இயங்கும் ஒரு அரசியல் எதிர்க் கட்சி! உண்மையில் அதன் நடவடிக்கைகளை தடுக்க முடியாது ஒரு சுதந்திர நாட்டில், எழுத்து-பேச்சுரிமையும், எந்த தனி இயக்கத்தையும் தோற்றுவித்து நடத்தி வரும் உரிமையும் உள்ளதால் ஒருவர், தான் எண்ணியதை எடுத்துரைக்க முடியும்: தடுக்க முடியாது!" என்று இந்த மறுமொழி நியாயமானதே தவிர திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை ஆட்சிக்கு எதிராக 1961 மே 9ந் தேதியன்று நடத்தி காட்டிய ஊர்வலமும்

சுதந்திரமும் சட்டமும், சேர்ந்த இடத்தில், ஒருவர் சுதந்திரம் மற்றவர்க்கு பயன்படுவதாகவோ இருக்க முடியாது: கூடாது என்பதே சட்டத்தின் உட்கருத்தாகும் இதிலிருந்து புரிந்துக்கொள்ள கூடியதெல்லாம், ஒருவர் தான் பெற்ற சுதந்திரத்தின் மூலம் அதனினும் சற்று உயர்ந்த நலம் பயக்கும் சுதந்திரத்தை எதிர்நோக்கி நிற்பதைக் கூட, எந்த ஒரு நாடும் ஒருதடையை விதிக்கும் சட்டத்தை உருவாக்கக் கூடாது; கொண்டுவரக்கூடாது என்பதேயாகும். ஆகவே, எந்த ஒரு நாடும் ஒருவருக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தின் மூலம் பெறுகின்ற மறு சுதந்திரத்தை தடுக்கக் கூடாது என்பதே நீதி!

இந்திய பிரதமர் திரு. நேருவுக்கு 10.7.1958ல் விடுத்த வேண்டுகோள்.

(திரு. செ. வைத்திலிங்கம்)

''தற்போது இலங்கையில் தூதராக இருப்பவருக்குத் தென்னிந்திய மொழிகளே புரியவில்லை. எனவே இலங்கைக்குத் தென்னிந்தியாவைச் சார்ந்த ஒரு தூதரை இலங்கை இந்தியர்களின் பிரதிநிதியாக அனுப்பி வையுங்கள், ஏனெனில், இலங்கையில் உள்ள இந்தியர்களின் 99 சதவீதம் தமிழர்களும் மலையாளிகளுமேயாவர்.''

1958-ம் ஆண்டு ஜூலாய் மூன்றும் தேதி தாங்கள் இந்திய செய்தியாளர்களுடன் பேசுகையில் அண்மையில் இலங்கையில் நடைபெற்ற கலவரங்களில் இந்தியர்களுக்குச் சம்பந்தமே இல்லை என்று கூறியிருக்கின்றீர்கள். ஆனால் இலங்கை கலவரத்தில் பல இந்தியர்கள் தங்கள் உயிர்களைப் பலிகொடுத்திருக்கின்றார்கள். இந்தியர்களின் கடைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன; அவர்கள் கடைகள் தீயிடப்பட்டிருக்கின்றன; கடைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

கொழும்பில் தமிழர்கள் வீடுகள் தீக்கு இரை

சிங்கள வெறியரின் வெறிச் செயல்கள்!!

இலங்கைத் தமிழர்கள் தொடுத்த அறப்போரை அடக்கி ஒடுக்க, சிரிமாவோ பண்டார நாயகாவின் சர்வாதிகார ஆட்சி நினைத்தால் குலை நடுங்கும் வெறித் தனமான செயலில் ஈடுபட்டிருந்தது.

அங்கே தமிழினத்தார் கண்ணீர் கொட்டினர்! கதறிப் புலம்பினர்! கற்புக்கும் ஆபத்தென்று பெண்கள் குமுறி அழுதனர்!

கட்டவிழ்த்துவிட்ட சிங்கள ராணுவத்தினர், தமிழர்களது இல்லங்களை தாக்கியிருக்கின்றனர் தமிழர்களது கடைகளின் மீது கல்லெறிந்து கலாட்டா செய்தும். அதற்குத் தீயிட்டும் நாசமாக்கியிருக்கின்றனர்.

அங்கே தமிழர்களது மானம் பறிக்கப்பட்டன! உரிமை பறிக்கப்பட்டிருப்பதோடு, தமிழ்ப் பெண்மணிகளிடம் சிங்களச் சிப்பாய்கள் முறை கேடாக நடந்து கொண்டனர்.

இது கண்டு அச்சமடைந்த தமிழர்கள், தங்கள் இல்லத்துப் பெண்களை பாதுகாவலான இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஓர் பள்ளியின் தலைமையாசிரியர் இல்லத்தை ராணுவத்தினர் சூழ்ந்து, தென்னை, பனை ஓலைகளிட்ட வேலிகளில் தீ வைத்து வேடிக்கை பார்த்தனராம். இதனைத் தடுக்க வந்த காவற்காரனை துப்பாக்கி முனையை நீட்டி துரத்தியிருக்கின்றனர்.

சிங்கள ராணுவ சிப்பாய்களோடு, சிங்கள வெறியர்களும் சேர்ந்து இத்தகைய கொடுஞ்செயலில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

சிங்கள ராணுவ வெறியர்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பலர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர்கள் தமிழர்களுக்கு ஆறுதல் கூறி தேற்றவும் அஞ்சுகிறார்கள்.

இலங்கையில் வாழ் இலங்கை-இந்திய தமிழர்களுக்கு, 1958-ம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் சிங்களவரால் விடுத்த எச்சரிக்கை!

பாணத்துறையிலிருந்து கொழும்பு கோட்டை வரை வாழ்ந்து வருகின்ற தமிழர்களுக்கு, 1958-ல் சில அரசியல் தலைவர்களும், சில புத்த சாமியார்களும் சேர்ந்து இடர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அஃதாவது, "தமிழர்களே இலங்கையை விட்டு வெளியேறி விடுங்கள் உங்கள் சொத்து சுதந்திரத்தை எல்லாம் விட்டு! இன்றேல், நீங்கள், சுட்டும், கைகுண்டுகளால் தாக்கப்பட்டும் அடித்து உதைக்கப்பட்டும் அழித்தொழிந்து விடுவீர்கள்! எனவே இப்போதே வெளியேறி விடுங்கள்! மீறி இருந்தால் நீங்கள் பாதுகாப்போடு இருப்பீர்கள் என்று நினைப்பது தவறு; தமிழராகிய உங்கள் தலைகீழ் தீவட்டியாக்கி விடும் சக்தி எமக்கு உண்டு. உங்களைத் தொடர்ந்து, முஸ்லிம்களும், மலாய்களும் அழித்தொழிக்கப்படுவர். எமக்கு புத்த பிக்ஷுக்கள் ஆதரவு உண்டு. புத்தமதம் சாராத மக்கள் வாழாத—நூற்றுக்கு நூறு சிங்களவர்களே வாழும் புனிதமான நகரங்களாக கொழும்பு, அநுராதபுரம், கண்டி, குருணாக்கல், பொலன்னருவா ஆகியவை மாறவேண்டும்! வெளியேறி விடுங்கள் வேதனைக்குள்ளாகாதீர்கள்" என்பதாகும். 1958—ல் ஏப்ரல், மே, ஜூன், மாதங்களில் அச்சிட்டு வெளியிட்ட, துண்டு வெளியீடுகளில் உள்ளவையே மேலே எடுத்துக் காட்டப்பட்டவை. அந்த துண்டு வெளியீடுகள் சிலவற்றை முன்னாள் முதலமைச்சராகயிருந்து மறைந்த திரு. எஸ். டபுள்யு. ஆர். டி. பண்டார நாயகாவிற்கு அனுப்பியிருந்தேன். அது குறித்து எடுத்து நடவடிக்கை அந்த துண்டு வெளியீடுகளில் கூறப்பட்டுள்ளவைபோல் தலைவர் களை செய்யத் தூண்டியதுதான்!

இது நான் எதிர்பார்த்ததுதான். ஏனெனில், அவருடைய ஆட்சியில்—அவருக்குத் தெரிந்துதான் சூறையாடல், கொன்று குவித்தல், தீயிட்டு பொசுக்குதல் ஆக அத்தனையும் நடைபெற்றது. அவர் விரும்பியதெல்லாம், சிங்களவர் வாழ்வாங்கு வாழவேண்டும்; தமிழர் தாழ்ந்து வீழ்ந்து விட வேண்டும். என்ற ஒரே எண்ணம்தான்!

டிஸ்டிறிக் கோட் தீர்ப்பு எங்கே?

கோடீஸ்வரரின் வழக்கில் நீதிபதி கிரெட்லர் கோடீஸ்வரனுக்கு வெற்றி கொடுத்தார். அப்படி வெற்றி பெற்ற பின்னால் அற்ரேணி ஜெனரல் அப்பீல் எடுத்தார் தேசிய அரசாங்கம் வந்தவுடன் அப்பீலை ஒதுக்கி விட்டார். தமிழனிவுக் கட்சியும் அதன் மூடத் தந்தையும் ஒருவித மான நடவடிக்கையும் எடுக்காத படியால் தமிழரின் நன்மை அடைய முடியாமல் அடிமை வாழ்க்கைக்கு அத் திவாரம் போட்டு வந்த தமிழ் அரசுக் கட்சி இன்றும் தமிழ் மக்கள் உரிமையுடன் வாழவேண்டுமென்று தமிழ் அரசுக் கட்சியினருக்கோ அல்லது, பொன்னம்பலக் கட்சி யினருக்கோ விருப்பமில்லாத படியால்த்தான் ஆயிரக்கணக் கான அரசாங்க சேவகர்களும் உத்தியோக மற்ற வாலி பர்களும் வீடு வீடாய் இருந்து கஷ்டப்படுகிறார்கள்,

தேசிய அரசாங்கம் கொடுத்த சினிபோலே உரிமை தமிழினத்தை மதிப்போடை வாழ விடாது:

தமிழினம் எந்த அரசாங்கம் வந்தாலும் தலைவாகள் சுயநலத்திலிருக்கும் வரை தமிழரின் கெதி அடிமை வாழ்க்கைதான்.

செல்வநாயகமோ, திருச்செல்வமோ அறிவுக் கட்சி யினரும் மகாநாடுகள் கூட்டி கட்சியை பெருக்குவதே கண்ணும் கருத்துமாகி இருக்கின்றனர் பணம் வசூல் பண்ணுவதும் மாலையிடுவதும், மட்டிகளின் நோக்கம்.

இவ்வளவு துன்பக் கடலில் இருக்கும் தமிழருக்கு காலஞ்சென்ற சேர் பொன் இராமநாதர் போன்ற தலை வரில்லாத படியால் தமிழினம் கேவல நிலையில் இருக்கின் றனர்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வரும் நாடெங்கும் வாழ வேண்டும் இலங்கையில் செல்வநாயகமும், மக்களும், திருச்செல்வமும் மக்களும், நாகநாதனும் மக்களும், கொழும்பில் வாழ வேண்டும் சிங்கள மயமாகி மற்றுமெல் லாரும் தமிழ்ப் பகுதிகளில் வாழ வேண்டுமாம். அதற்கு அடிப்படை காரணமென்ன? உணருங்கள் மக்களே உணருங்கள்.

தமிழர் பகுதியில் அட்டூழியம்

தமிழர் வாழும பகுதியில் சிங்கள ஆட்சியின் கொடுமை நிலவத் தொடங்கியதற்கான சான்றுகள்

27-4-1964 அன்று மட்டக்களப்பிலிருந்து தொண்டர் கனகல்லறைக்கு அழைத்துச் சென்று நையப்புடைத்து அவர் கனமருத்துவ மனையில் கொண்டு சேர்த்திருக்கின்றனர்.

28-4-1961 அன்று திரிகோணமலையில் கடற்கரை பகுதிகளில் உள்ள மீனவர் குடிசைகளுள் புகுந்து தகாத முறைகளில்—அடாத வகையில் கொடுமைப் புரிந்திருக் கின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்பிலும், திரிகோணமலையிலும் மற்றப் பகுதிகளிலும் வன்முறைச் செயல்கள் நடந்திருக் கின்றன. அங்குள்ள தமிழர் சிங்களத்தை பயிலவேண்டும் என்ற காரணத்திற்காக! அவ்வாறு கட்டாயப்படுத்தி தமி ழரை இக்கட்டுள்ளாக செய்தது – ஆட்சியாளரின் உத்தி ரவு பெற்றே ... பெருமலோ இராணுவத்தினரால்!

இத்தகு கொடுமைகளை - நடக்கக் கூடாதவற்றை இலங்கை மேல் (சென்ட்) சபையில் தமிழ் உறுப்பினர் திரு. எஸ். நடேசன் குற்றம் சுட்டி காட்டி பேசியுள்ளார். மேலும், வானெலியில் தமிழ்ப்புலமை யற்றவரிடம் நிர்வா கப் பொறுப்பை விட்டு விட்டாலும், செய்திகளை தணிக்கை செய்வதாலும் தமிழை நசுக்குவதற்காகவென்றே என்பதை எடுத்துரைத்து அந்த அநீதி மேலும் நடவாதிருக்கவும் வா தாடியிருக்கிறார்.

இலங்கையில் நாடற்றவர்கள் எதிர்கால வாய்ப்பிலும் ஒரு துயருதவியும் இல்லை

இந்தியாவிலிருந்து சென்று குடியேறியவர்களின் இடுக்கண் நிலை

இலங்கையில் நாடற்றவர்கள் பிரச்சனையை எல்லோ ரும் தட்டிக் கழிப்பதும் — தவருகக் கருதுவதும், இலங் கையில் வாழ்பவர்களில் பெரும்பாலோர் இந்தியாவின்

பூர்வீகக் குடிமக்கள்! என்பதால். அஃதன்றி இன்று அல்லது பன்நெடுங் காலமாக இருப்பவர்களுடைய தந்தை தாத்தா அந்த தாத்தாவின் தாத்தாக்கள் கூட இந்திய துணைக் கண்டத்திலிருந்து சென்று குடியேறியவர்கள் தாம் அவ்வாறு இலங்கையிலுள்ள பல இலட்ச மக்களாகிய இந்திய குடிமக்கள் நிரந்தரமாக வாழ்ந்து வருபவர் எல்லாம் இலங்கையிலேயே பிறந்து-தேயிலை புதரிலும்—ரப்பர் மரங்களிடையே வளர்ந்து வந்தவர்தாம். அத்தகையவருள் பல்லாயிரக்கணக்கானவர், அவர் தம் முன்னோர்களின் தாயகத்தைக் கண்டதுமில்லை—வந்ததுமில்லை என்பதைக்காட்டிலும், அவர்கள் கொழும்புக்கு வரும்போது (அதுவும் பலமிருக்கிறவர்களாயிருப்பின்) கடலைப் பார்க்கும் போது தான் அப்பக்கத்தில் தமது தாயகம் இருப்பதாக அறிந்திருப்பரே தவிர மற்றபடி அல்ல!

ஆனால், அவர்களுள் சிலர் சுற்றுப் பயணத்திற்கென்றும், புண்ணிய பயணம் செய்வதற்கென்றும், மதவழக்குப்படி தமது நோம்புக்காக கோயில்களுக்கு வருவதற்கென்று தென்னிந்தியாவிற்கும் வந்ததும் உண்டு அஃதும், அடையாளச் சீட்டு அல்லது செல் சீட்டு (Pass Ports) கட்டாயப்படி--சட்டப் பிரிவுப்படி தவிர, ஆதீனம் அல்லது பண்ணை ஆள் அடையாளச் சீட்டுக்கொண்டு வந்து செல்வதும் கூட தடை விதிக்கப்பட்டுவிட்டது அதன் மூலம், இலங்கை வாழ் இந்தியர்தம் மூதாதையர் காலந்தொட்டு வந்த தம் உறவுமுறை அத்துணையும் இழக்க வேண்டியதாயிற்று என் பதோடல்லாது அவர்தம் உழைப்பு முழுதையும். வாழ் நாள் இறுதிவரை இலங்கை மண் செழிப்புறவே காணிக்கையாக்கினார்கள் என்றால் மிகையல்ல!

1949 - ம் ஆண்டின் இந்திய - பாக்கிஸ்தான் குடிமை சட்டப்படியும், 1948-ம் ஆண்டின் குடியுரிமை - குடி ஏற்றம் சட்டப்படியும் இலங்கை வாழ் இந்தியர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சென்று வருகின்றதை பெரிதும் தடுத்து விட்டன!

1952—ல் இந்திய பேரரசு ஆதின தொழிலாருக்கான சட்டத்தை கொண்டு வந்ததைக் கொண்டு ஆதின உரிமைச் சீட்டு பெற்று வந்ததுங்கூட இப்போது செல்லாத தாகிவிட்டது. இந்தியாவுக்கு வரவேண்டுமாயினும்

கொழும்பு நகரத்திலிருக்கும் இந்திய ஹைகமிஷனரிடமோ அல்லது இலங்கை குடியுரிமை கட்டுப்பாடு அதிகாரியிடமோ பயண அமைதி—உரிமைப் பத்திரம் பெறவேண்டியதவசிய மாகப்பட்டுவிட்டது அவ்வாறு பயண அனுமதி பத்திரம் வழங்குவதற்குக்கூட இலங்கை நிர்வாகத்துறை விரும்ப வில்லை. ஒருகால் அவ்வாறு வழங்கப்படுகின்ற பயண அனு மதி—உரிமை பத்திரம் அவர்களே இலங்கை குடிமக்க ளுக்கு சமமாக கருத இடமளித்துவிடுமே என்ற உள்கருத் துடன்தான் அதும் வழங்கப்படாது மறுக்கப்பட்டன மற்றோர் புறம் இந்திய ஹைகமிஷன், தனது பாட்டாளி அல்லது அப்பாவி மக்கள் – அவர்களுடைய நியாயமான (பிரஜா) உரிமைகூட மறுக்கப்படுகின்ற நாட்டிற்கு அவர் கள் செலுத்துகின்ற—செலுத்தித்தீர வேண்டிய சுங்கத்தை தட்டிக்கழிக்க முடியாததைக் கண்டு பொறுதலால், போக மட்டுமே ஒரு வழி பயண அமைதி மட்டும் கொடுத்து வர முன் வந்தது இதன் பொருட்டே இலங்கை வாழ் இந்தியர் பெரும்பாலோர் இந்தியாவை கண்டறியாதவர் ஆயினர்

1939 க்கு பிறகு இலங்கையில் புதிதாக வந்து குடியேறவில்லை.

மேலே குறிப்பிட்ட ஒரு துறை பயண அனுமதி சீட்டுகூட; ஹை கமிஷன் கொடுக்க முன் வந்ததென்றால் இந்திய நாட்டுரிமையை வலுக கட்டாயமாக அல்லது தாலுக முன் வந்து கோரிமவர்களுக்கு, இந்திய நாட்டுரி மைமை பெற்றே தீரவேண்டும் என்ற முடிவு செய்துல் லதை மெய்ப்பிக்கும் தகுதி உடையவர்களுக்கு மட்டுமே இந்திய குடிமக்களின் கைத்திரன் பெற்றவர் மட்டும் (ஆதினத் தொழிலாளர்) இந்திய குடியுரிமை கோரியவர் களுக்கும் இந்திய ஹைகமிஷன் ஒரு துறை பயண அனு மதிச் சீட்டு வழங்கியது. பெரும்பான்மையோர் மட்டும் உலகமெங்கிலும் பேசப்படுகின்ற தமிழ் மக்களிடையும் தம்மிடையும் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து உறவுகொண் டுவிட்ட பண்பாடு — கலை — மத கோட்பாடுகள் தவிர, மற்ற தொடர்பு - உறவை துணித்துக் கொண்டு தமது வாழ்விடமாக இலங்கையை ஆக்கிக்கொண்டு நிலைத்துவிட் டனர்.

நாடற்றவர்கள் எனப்படும் இந்திய குடி மக்களுள் பெரும் பான்மையோர் குடியேற்றும் குடியுரிமை சட்டபிரகடனத்திற்குப் பிறகு, மேற்குறிப்பிட்ட சிறிதளவு உறவினையும் முழுக்க விடுத்தனர். மேலும், 1939-ல் திறனற்ற தொழிலாளர்களை இலங்கைக்கு அனுப்புவதை தடை விதித்த பிறகு, புதியதாக இலங்கைக்கு வந்து குடியேறியவர்கள் யாரும் இல்லை! ஆகவே, இலங்கை தேயிலை ரப்பர் தோட்டத் தொழிலாளராகயிருக்கும் இந்திய குடி மக்கள் எல்லாம், குறைந்தது 1939 லிருந்தே தமது தாயகமாக்கிக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வருபவர்களாவர் என்பதை நாம் ஏற்றுத் தீரவேண்டும்.

மூவகை!

இலங்கைத் தீவில் குடியேறிய இந்திய குடிமக்களை பெருவாரியாக மூவகைப்படுத்தலாம். முதல் வகை இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து இந்தியாவுடன் தொடர்பு கொள்ளாது அங்கேயே வாழ் நாள் கழித்து வருபவர்கள் என்பதால் குடியுரிமை பெறும் தகுதி படைத்தவர்கள். இரண்டாம் வகை, இலங்கைக்கே தம்மை காணிக்கையாக்கிவிட நினையாது இருப்பவர்கள், தமக்கு குடியுரிமை பெறுதவர்கள்! மூன்றும் வகை: கடைசிவரை இலங்கையிலேயே இருப்பதா அல்லது இந்தியா செல்வதா என்ற முடிவுக்கு வராதவர்கள்.

முதல் வகையினருள் 1949-ம் ஆண்டின், இந்திய—பாக்கிஸ்தான் (தங்குகிறவர்கள்) குடியுரிமை சட்டத்தின் படி, எட்டு லட்சம் மக்களுக்குமேல் தம்மை இலங்கை குடியுரிமை பெற்றவராக ஏற்கக் கோரி மனுச் செய்துக் கொண்டதில் இரண்டு லட்சம் மக்கள் மட்டுமே இலங்கை குடியுரிமை பெற்றவராக ஏற்கப்பட்டனர். மற்றவர் நாடற்றவராக்கப் பட்டனர். இரண்டாம் வகையினருள் இரண்டு லட்ச மக்களுக்குமேல், இலங்கையிலிருந்து முழுவாக வெளியேறி விட்டவர்கள் குத்து மதிப்பாக பார்த்தால் 60,000 லிருந்து 70,000 இந்திய குடிமக்கள் மட்டுமே இன்னும் அங்கு இருப்பவர்கள். 1948 ல் கொண்டு வந்த குடிபுகல் — குடியேற்றம் திட்டத்தின் கீழ், எதிர்வரும் நாளில்—அடுத்த சில ஆண்டுகளுள்—இந்த அறுபதினி

ருந்து எழுபதாயிரம் பேர் மட்டுமின்றி மொத்தத்தில் 2 00,000 பேரை வெளியேற்றப்படவிருக்கின்றார்கள் ஆனால் இதற்கு இந்தியப் பேரரசு எந்த நியாய விசாரணையையும் மேற்கொள்ள முடியாது மொத்தத்தில் ஏனெனில் இந்திய பேரரசு இலங்கை அரசு விரும்பும் வரை இந்திய குடிமக்கள் அங்கே இருந்து வரலாம் என்ற இலங்கை அரசின் கோட்பாட்டுக்கு இணங்கிவிட்டது.

மூன்றும் வகையினருள் குறைந்த சதவிகிதத்தினர் தாம் இலங்கைத் தீவில் படும் இன்னலை தாங்கொணாதபடியால் இந்திய குடியுரிமை பெற முனைந்தும் — பெற்று இந்தியாவுக்கே திரும்பவும் முயன்று வருகின்றனர் மீதமுள்ளவர்கள், குடியுரிமை பதிவு அதிகாரியினால் தமது இலங்கை குடியுரிமை கோரிக்கையை மறுக்கப்பட்டதால் நாடற்றவர்களாக்கப்பட்டவர்கள்.

இன்றுள்ள சிக்கலான பிரச்னை எல்லாம், இலங்கையில் உள்ள இந்திய குடிமக்களுக்கு என்ன நேருமோ என்பதைக் காட்டிலும், அங்குள்ள 8,00,000 மக்கள் தம்குடியுரிமைப் பிரச்னையே ஒரு நிலையற்றதாக உள்ளதுதான். இலங்கையைப் பொறுத்தமட்டில் அவர்கள் இயற்றிய சட்டத்தினால் அங்குள்ள இந்திய குடிமக்களை நாடற்றவர்களாக்கிவிட்டது.

இந்தியாவைப் பொறுத்த மட்டில், மேற் குறிப்பிட்டவர்கள் இலங்கை அரசினரால்லேயே நாடற்றவர்கள் எனக் கருதி ஏதாவது செய்ய வேண்டு மென்பதுதான் இந்த எதிர்பார்த்தல்-- இலங்கையில் நாடற்றவர்களாக்கப்பட்டவர், இந்திய குடியுரிமையையேனும் பெற்றளர்களாக கருதப்படாதவர்களாயினர் ஆகவே மேற்குறிப்பிட்ட மூவகை இந்திய குடிமக்கள்தாம் 'நாடற்றவர்கள்' எனப் படுபவர்.

இந்நிலைமை உறுவாகுமென்று இந்தியா அல்லது இலங்கையிலுள்ள யாரும் எந்த தலைவருமே எதிர்பார்த்திருக்கவில்லை ! பார்த்திருக்கமுடியாது ! 1940-ம் ஆண்டு தொடக்கத்தில், குடியேற்ற அரசின் துணைத் தலைவரும், அரசவைத் தலைவருமாகவிருந்த காலஞ் சென்ற திரு. டி. எஸ் சேனநாயகா அவர்கள் டில்லியில் கூடி சந்தித்த குழுவிற்கு

தமை வகித்த சர். கிரிஜா சங்கர் பாஜ்பாய் அவர்களுடன் தொடங்கிய பேச்ச வார்த்தையில் எடுத்த முடிவானது இலங்கையில் உள்ள இந்திய குடி மக்களுள் குறிப்பிட்ட எண்ணிக்கைவரை இலங்கை குடிமக்களாக்கிக் கொண்டு மீதமுள்ளவரை அவர்கள், பணி-தொண்டு இலங்கைக்கு தேவையில்லை என்னும்போது இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்படுவார் என்பதாகும்! ஆனால் அந்த நிலைமையை இந்தியா ஒத்துக்கொள்ளவில்லை. காலஞ்சென்ற திரு. சாலமன் டையஸ் பண்டாரநாயகாவின் 'புதிய சகாப்தம்' என்ற நூலில் 559-ம் பக்கத்தில் குறிப்பிடுள்ளார். அந்த, அந்த நோக்கம்தான் திரு. டி. எஸ். சேனநாயகாவால் 1953 மார்ச் திங்கள் 2-ம் தேதியன்று!

"எவ்வகையிலும் இலங்கையிலிருந்து நான்கைந்து லட்சம் மக்களை இந்தியாவுக்கு திருப்பி அழைத்துக் கொள்ள முடியாது என்று, இந்தியாவில் உயர் பதவியிருந்தவர், 1940-ல் நடந்த பாஜ்பாய்—சேனநாயகா பேச்சில் கண்ட முடிவினை எடுத்துரைத்தார், காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா! இந்திய துணைக் கண்டத்தின் மக்கள் தொகையுடன் இலங்கையில் நாடற்றவர்களாக கருதப்படும் மக்கள், கடலில் ஒரு துளி போன்றது எனலாம், அதே நேரத்தில் இந்தியர் திருப்பி அழைத்துக் கொள்ள மறுப்பதை மதிப்பதை போன்று இலங்கை சர்க்கார்-தமிழர்களை அங்கேயே நீடிக்க வைத்திருப்பது தன் நாடு செழிப்புற! அந்த செழிப்புக்கு உழைக்க நாடற்றவர்கள் என்ற பெயரோடு மற்ற பெறவேண்டிய உரிமைகள் அனைத்தும் இழந்துவிட்டு இருக்க!

இலங்கை அரசாங்கம் அமைச்சன் வாய்ப்பேச்சு

23-8-1966 இல் இலங்கை அரசாங்க அமைச்சன் தமிழ் மக்கள் முன்னிலையிலே செப்பினர். எனது குடும்பத்தினருக்கு இடையில் இரத்த உறவுண்டு 55 ஆண்டுகளில் எனது தந்தையும் பெரிய தகப்பனை ஹெக்டர் ஜயவர்த்தனவும் இந்தியாவில் இளைப்பாறிக் கொண்டிருந்த பொன். இராமநாதனை இங்கிலாந்து இலங்கையர் பிரதிநிதியாகப்

போட்டியிடச் செய்து வெற்றியீட்டிக் கொடுத்தார்கள். 1956 முதல் பத்தாண்டுகளாக நிகழ்ந்த துக்ககரமான சம்பவங்களை அடியோடு மறந்து விடுங்கள். 1958 இல் நிகழ்ந்த தேசியக் கட்சியின் பத்திரிகையும் ஜே. ஆரும் சேர்ந்து தமிழர் மீது வேட்டையாடிய பின்னால் மக்களே பாருங்கள். இவர்கள் இப்போது சொல்வதை இதெல்லாம் கடவுளின் திருவிளையாடல்.

அன்று பண்டாரநாயக்காவுக்கு இந்த வரலாறு கொடுத்திருந்தால் தமிழினம் உரிமை பெற்று மதிப்புற்று வாழ வேண்டியதில்லை. எப்படியாவதும் தமிழினம் உரிமை பெற்று வாழ வேண்டுமானால் பொன்னம்பலமும் செல்வநாயகமும் கள்ளங் கபடற்ற வகையில் ஒருங்கு கூடித் தமிழினத்தை மீட்டால் ஒழியத் தரிநினம் ஈடேற முடியாது.

தோட்ட நிர்த்தாக்குடி யிருப்பு தொழிலாளர் யூனியன்

தமிழரின் படையெடுப்பு, சோழ, பாண்டிய இராச்சியங்கள் தென்னிந்தியாவில் பராக்கிரமுற்றிருந்த காலத்தில் கி. பி. 1017-ம் ஆண்டிலே சோழர் வட இலங்கையை ஆக்கிரமித்து கி. பி. 1072-ம் ஆண்டு வரை ஆண்டுவந்தனர்.

ஆங்கிலேயர் மலைநாட்டைக் கைப்பற்றிய காலம் மத்திய இலங்கையில் தமிழர் குடியேறினர். மலைப்பாகங்களில்-காடால் சூழப்பட்ட நேரம்! விதிகள் திறக்க நாதிகள் இல்லை!! தபால் போக்குவரத்து எல்லாந் தொல்லை!!! மரப்பட்டையால் மர்ம ஸ்தானம் மறைக்கப்பட்டு - கற்குகையில் கண்ணுறங்கி - அன்னக்காவடி வேடவர்க்கம் நடமாடிய நாள். இந்நாளிற்முன் - நம் பாட்டன், பாட்டி, பூட்டன், ட்டிகளோடு கூட்டி வந்து குடியேற்றினர் வெள்ளையர்!

1837 - வருடத்திலே கோப்பி — 1867ம் ஆண்டிலே தேயிலே 1900¦ வருசத்திலே ரப்பர் — பயிரிட்டனர். மீறுட்சி அட்டை கடியால் அலறினுள்! ராமசாமி புலியால் பதம் பார்க்கப்பட்டான்!! நடையால் மிக வாடி—கடுங்குளிரால் கால் நடுங்கினுன் தொழிலாளி! பசியாலும், கஷ்டப்பாலும் பதரினுன் பாட்டாளி!! அந்தோ பரிதாபம்!!! 1883-ம் ஆண்டிலே 35,000 ஏக்கர் தேயிலே — 1889-ம் வருசத்திலே 50,000 ஏக்கர் கோப்பி — நாட்டப்பட்டன. நடந்ததென்ன? 1870-ம் ஆண்டிலே கோப்பியால் 27,53,000 பவுணையும் 1920-ம் வருடத்திலே தேயிலையால் 5 கோடி 40 லட்சம் பவுணையும் தட்டிக்கொண்டனர் ஐரோப்பியர்! அன்றிலிருந்து இன்று வரை அடைந்த லாபம் எவ்வளவு?

உழைத்து, உழைத்து எலும்புந் தோலுமாக உருகி இன்று காட்சியளிக்கும் பாட்டாளி வர்க்கம்—கள்ளத் தோணிகளாகவும் — நாடற்றவர்களாகவும் — குடியற்ற வர்களாகவும் — தொழிலற்றவர்களாகவும்—மசால் வடைகளாகவும் — தோசைகளாகவும்— நல்லெண்ணைகளாகவும் கணிக்கப்பட்டு — வாய்ப் பூட்டு போடப்பட்டுள்ளார்கள். ஏன்? தட்டிக் கேட்க ஆளில்லாததால்! மலையகத்திலே புதியதோர் விழிப்புணர்ச்சி இல்லாததால்!! உழைப்பை உறிஞ்சுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளதால்!!!

இந்நிலைகளைப் போக்கச் சிந்தித்தோம்! செயலாற்ற நினைத்தோம்!! இதன் விளைவு? யூனியன் பிறந்தது! ஏன்? குற்றப்பத்திரம் கோமாளிகட்கு சாவு மணி அடிக்க! இவேசம் பேசும் துஸ்டர்களைத் துண்டிக்க!! எனவே தோட்ட மக்கள் அனைவரும் யூனியன் வளர்ச்சியைப் பேண வேண்டப்படுகின்றனர்.

ஏன்? உங்களின் எதிர்கால உயர்ச்சியைக் கானல்
விடுதலே என்னும் மெல்லிசை கேட்டு விம்முது மானிட
நெஞ்செல்லாம்!
விடுதலே என்பது மானிடர் செல்வம் வேறேதும் செல்வம்
ஏதய்யா?

எம். வி. ஜி. பிரகாசம்

நிர். 19, நோத்லேன்,
பதுளை.

(பொதுச் செயலாளர்)

ச. இராசகோபாலாச்சாரி

4, பஸ்ஸல்வா ரோட்,
சென்னை.
16, ஆகஸ்ட், 1961.

திரு. செ. வைத்தினிதம்
திருநெல்வேலி.

அன்புடையீர்!

தங்கள் ஆகஸ்ட் 12-ந் தேதி கடிதம் வரப்பெற்றேன். தங்களுடைய எழுச்சிமிக்க பெரும்பணி குறித்து நான் நிறை மகிழ்ச்சி கொள்கிறேன். தங்கள் நன் முயற்சி வெல்வதாக! அதற்கென் வாழ்த்து! தங்கள் வெளியீட்டிற்கு நான் முன்னுரை வழங்க முடியாத நிலையில் இருக்கிறேன். வேறு பொருள் கொள்ளற்க!

தங்கள் உண்மையுள்ள,
ச. இராசகோபாலச்சாரி

வல்லே துணிச்சாலைக்கு உங்கள் உதவியை கொடுங்கள். மாத வீதம் ரூபாய் பத்துக்கொடுத்தாலும் உங்கள் தமிழ் நாட்டில்க் கமமும் கைத்தொழிலும் முன்னேற்றமடைந்தால் ஊணும் உடையும் தொழிலற்றோர்க்குத் தொழிலும் கிடைக்கும்.

அல்லது போனால் சிங்களவருக்கு அடிமைகளாகவே வாழ வேண்டும்.

தமிழ் மக்களே உணருங்கள். சற்றுச் சிந்தியுங்கள்.

— ஆசிரியர்.

மூன்று தலைமுறை வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவர்

கடந்த 66 ஆண்டுகள் அனுபவத்தில் மிகுந்த ஆயுர்வேத டாக்டர்; T. H. மதுரநாயகம் வைத்தியராஜ். கண்டு ஆலோசியுங்கள், அல்லது கடிதமூலமும் எழுதலாம்,

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.